விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 06 செவ்வாய்க்கிழமை (19.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

## பொதுமக்களின் காணி அபகரிப்புக்கு எதிராக மண்டைதீவில் பாரிய போராட்டம்

### நில அளவீட்டுப் பணிகள் இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - மண்டைதீவு பகுதியில் பொதுமக்களின் காணிகளை சுவீகரிப்பதற்கு எதிராக பாரிய போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.
போராட்டத்தில் பொலிஸார் குவிக்கப் 19

## வடக்கில் 10 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ். கொரோனா ஆய்வு கூடங்களில நேற்று மேற்கொள்ளப்பட்ட 19


## பருத்தித்துறையில் இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறையில் மேலும இருவருக்கு கொரோனாத் தொறறு உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள் 19

## முல்லைத்தீவு குருந்தூர் மலையில்

# ஆதி ஐயனார் இடத்தில் எழுந்தருளினார் புத்த பிரான்

### தமிழ் மக்கள் வழிபட்டு வந்த சூலமும் பிடுங்கி எறியப்பட்டது



- இராணுவத்தின் அனுசரணையுடன் தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வாராய்ச்சிப் பணிகள் நேற்று ஆரம்பமாகின.
- தமிழ் மக்கள் வழிபட்டு வந்த சூலம் பிடுங்கி எறியப்பட்டு புத்தர் சிலை வைத்து வழிபாட்டுடன் தொல்பொருள் அகழ்வுப் பணியை ஆரம்பித்தார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க.

தமிழ்மக்களுக்கு சொந்தமான புராதன ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ள வயல் 19

## கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தனிமைப்படுத்தப்பட்டார்

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான இராஜாங்க அமைச்சருடன் தொடர்புபட்ட அடிப்படையில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். 19

## குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)
பயம், சந்தேகம் இல்லாத சமூகம் ஒன்றை ஏற்படுத்த குற்றங்களுக்கு எதிரான நியாயமான பொறிமுறையினூடாக குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை பெற்றுக் கொடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நீதி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.
பொதுமக்கள் பாது 19

## கொரோனாத் தொற்றால் மேலும் 6 பேர் மரணம்

### உயிரிழப்பு 270 ஆக உயர்வு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி மேலும் 6 பேர் நேற்று உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரி 19

## 8 சுகாதார அமைச்சில் பேருக்கு கொரோனா

(கொழும்பு)
சுகாதார அமைச்சில் கடமையாற்றி வரும் எட்டு பேருக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.
பரிசோதனைகளின் மூலம் குறித்த எட்டு உத்தியோகத்தர்களுக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. 19

## இலங்கைக்கு ஜெனிவா பெரும் சவாலாக இருக்கப் போகிறது

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித

(கொழும்பு)
இலங்கைக்கு ஜெனிவா பெரும் சவாலாக இருக்கப் போகிறது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாஹம தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நான்கு தமிழ் கட்சி 19

## இடமாற்றத்தில் அனைவருக்கும் சம உரிமையை வலியுறுத்தி

### யாழில் ஆசிரியர்கள் கவனயீர்ப்பு



19



அமெரிக்க ஜனாதிபதியாக
## ஜோ பிடன்
நாளை பதவியேற்கிறார்
10ஆம் பக்கம் பார்க்க

## 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு கட்டாய இராணுவப் பயிற்சி

சபையில் சமர்ப்பிக்கப்படும் அமைச்சர் சரத் வீரசேகர



03ஆம் பக்கம் பார்க்க

# பருத்தித்துறை நகரில் வீடொன்றில் 19 பவுண் நகை கொள்ளை

## பெண் மற்றும் அவருக்கு உதவிய ஆண் ஒருவருக்கும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரில் உள்ள வீடொன்றில் சுமார் 19 பவுண் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் மற்றும் அவருக்கு உதவிய ஆண் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அடிக்கடி சென்று வரும் வீட்டிலேயே அந்தப் பெண் தனது கைவரிசையைக் காட்டியுள்ளார்.

பருத்தித்துறை நகரில் உள்ள வீடொன்றில் கடந்த சில தினங்களுக்கு முன்பு தங்க நகைகள் காணாமற்போயிருந்தன. அது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 19 பவுண் தங்க நகைகளைக் காணவில்லை என்றும் தமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்லும் பெண் ஒருவரில் சந்தேகம் உள்ளது என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை குற்றத் தடுப்பு பொலிஸார், முறைப்பாட்டில் சந்தேக நபராகத் தெரிவிக்கப்பட்டிருந்த பெண்ணை நேற்றுக் கைது செய்தனர்.


அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சுமார் 10 தங்கப் பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டன. அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்களை வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, இந்த திருட்டுடன் தொடர்புடைய மேலும் சிலரைத் தேடிவரும் பொலிஸார், சந்தேக நபர்களுக்கு வேறு கொள்ளை சம்பவங்களுடனும் தொடர்புள்ளதா என்ற கோணத்திலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-03)

# மரண அறிவித்தல்



## வள்ளியம்மை முருகேசு

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை முருகேசு நேற்று (18.01.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சரவணை - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற மணிமந்திர வைத்தியர் முருகேசுவின் (சாமியார்) அன்பு மனைவியும் நாகரஞ்சினி (செல்லன்), பத்மரஞ்சினி (ரஞ்சன்), நாகேந்திரா, நாகபாலா (குகன்), காலஞ்சென்ற நாகஸ்ரீ, நாககுமரா, நாகதீபன், நாகயாழினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவகுமாரன், ஜெயச்சந்திரன், யமுணா, தர்சிகா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், பசுபதிப்பிள்ளை, நாகேசு, மாணிக்கம் மற்றும் கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கம், பார்வதி, நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் சிந்துஜா, திலக்சன், திவாகர், சுமித்திரன், நிருஜா, பிரவீனா, சரண்ஜா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.01.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் வேலணையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1198)

6ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

# யாழில் கொரோனா நிலவரம் குறித்து மாவட்ட கட்டளை தளபதியுடன் அரச அதிபர் மகேசன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் கொரோனா நிலவரம் குறித்து மாவட்ட கொரோனாக் கட்டுப்பாட்டு இணைப்பு அதிகாரியும் கட்டளை தளபதியுமான மேஜர் ஜெனரல் செனரத் பண்டாரவிற்கும் மாவட்ட அரச அதிபருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தில் தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் மற்றும் எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் தற்போதைய நிலையில் பாடசாலைகள் மற்றும் பொதுச் சந்தைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக கொரோனா தொற்று பரவுவதை தடுத்தல் தொடர்பாக பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் குறித்த சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் பலாலி இராணுவ கட்டளை தலைமையக ராணுவ உயர் அதிகாரிகள் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-03)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

1. இசைமாணி / நடனமாணி - மூன்றாம் வருடத் தேர்வு - 2016 (இறுதிச் சந்தர்ப்பம்)
2. இசைமாணி / நடனமாணி - நான்காம் வருடத் தேர்வு - 2016

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/- இற்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 செ.மீ X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 05.02.2021 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளிலும் மேற்படி இணையத்தள முகவரியிலும் விளம்பரப்படுத்தப்படும்.

மேற்படி பரீட்சைகள் மூன்று நாட்கள் முன்னறிவித்தலுடன் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் பரீட்சைக்கு தயாராகுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர் (C-1196) 18.01.2021

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**சின்னத்துரை குமாரவேல்**
(விவாகப் பதிவாளர் - வலிகாமம் வடக்கு)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5317)

பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் சங்கம், யாழ்ப்பாண மாவட்டம்.

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியப் பொறுப்பாளராக கடமையாற்றும் தோழர் ச. செல்வகுமார் அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
**மாணிக்கம் சதாசிவம்**

அவர்கள் நேற்று (18.01.2021) காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5319)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
கிளை - நல்லூர் ப.நோ.கூ. ச

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# கொரோனாவை சமாளிப்பது இந்த ஆண்டில் மேலும் சிரமமாகலாம்-உலக சுகாதார அமைப்பு

(ஜெனிவா)

**கொரோனா வைரஸ் பரவலைச் சமாளிப்பது, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் இன்னும் சிரமமாக இருக்கக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எளிதில் தொற்றக்கூடிய புதிய வகை வைரஸ் உலகளவில் வேகமாகப் பரவி வருவதைத் தொடர்ந்து, அந்நிறுவனத்தின் அவசரகாலப் பிரிவுத் தலைவர் மைக் ரயன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பிரிட்டனிலும் தென்னாபிரிக்காவிலும் முதன்முறையாக அடையாளம் காணப்பட்டுள்ள இந்த புதுவகை வைரஸ், தற்போது சுமார் 50 நாடுகளில் பரவியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதையடுத்து, பல ஐரோப்பிய நாடுகளில் வைரஸ் தொற்றுக் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

உலக சுகாதார அமைப்பு




வெளியிட்ட அதன் மிக அண்மைய அறிக்கையில், கடந்த வாரம் உலகம் முழுவதும் ஏறக்குறைய ஐந்து மில்லியன் பேருக்கு வைரஸ் தொற்று உறுதியானதாகத் தெரிவித்தது.

விடுமுறை காலத்தில் பலரும் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சரிவரக் கடைப்பிடிக்காததால் தொற்று அதிகரித்து இருக்கக்கூடும்.

தற்போதைய தடுப்பூசிகளால் புதுவகை வைரஸைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போகலாம் என்ற அச்சமும் பலரிடையே எழுந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. (நி-4)

## கொரோனா எதிரொலி

# பாராளுமன்ற அமர்வு இரு தினங்கள் மட்டுமே



(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாராளுமன்ற அமர்வுகளை இந்த வாரம் இரு தினங்களுக்கு மாத்திரம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாராளுமன்ற அமர்வுகளை இன்றும் மற்றும் நாளையும் மாத்திரம் நடத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒன்பது ஊழியர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து, பாராளுமன்ற நடவடிக்கைகளை எப்படி நடத்துவது என்பது குறித்து முடிவெடுப்பதற்காக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் குறித்த கூட்டம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# மருதனார்மடம் சந்தை இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வியாபாரிகள் கோரிக்கை


(குப்பிழான்)

வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த வடமாகாணத்திலுள்ள அனைத்துப் பொதுச் சந்தைகளும் நேற்றுத் திங்கட்கிழமை திறக்கப்பட்ட நிலையில் யாழ்.மாவட்டத்திலும் சந்தைகள் திறக்கப்பட்டன. இந்நிலையில் மருதனார்மடம் பொதுச் சந்தையும் திறக்கப்பட்டது.

எனினும் வியாபாரிகள் சந்தைக் கட்டடத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வலி.தெற்குப் பிரதேச சபை அனுமதி வழங்காமையால் சந்தை வியாபாரிகள் சந்தைக் கடைத் தொகுதிக்கு வெளியே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நீண்ட நாட்களாகத தாம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாமையால் வாழ்வாதார ரீதியாகத் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வியாபாரிகள் வலி.தெற்குப் பிரதேச சபை சந்தைக்குள் மீண்டும் வியாபாரம் செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

கொரோனாத் தொற்று அபாயம் காரணமாக யாழ்.வலிகா



மத்தின் முக்கிய சந்தையான மருதனார்மடம் பொதுச்சந்தை கடந்த டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் மூடப்பட்டது.

இந்த நிலையில் கொரோனாத் தொற்றுப் பரவலின் எதிரொலியாக வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பொதுச் சந்தைகளும் கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் நேற்றையதினம் மீண்டும் பொதுச் சந்தைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (5-4-18)

# கட்டாய இராணுவ பயிற்சி வழங்கத்திட்டம்-சரத் வீரசேகர



(கொழும்பு)

18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கை குடிமக்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று தெரிவித்தார்.

இந்த முன்மொழிவினை எண்ணி எவரும் அச்சமடையத் தேவையில்லை என்றும் இந்த தீர்மானம் நாட்டின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த பயிற்சி மக்கள் தமது சொந்தக் காலில் நிற்கவும் தலைமைத்துவ குணங்களை ஊக்குவிக்கவும் ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கும் நாட்டிற்கு பங்களிக்கவும் உதவும். இந்த முன்மொழிவினை விரைவில் பாராளுமன்ற அமர்வில் முன்வைக்கவுள்ளேன்.

இந்த நடைமுறைகள் பல நாடுகளுக்கு ஒழுக்கத்தை ஏற்படுத்த உதவியுள்ளதுடன் இது இளைஞர்களுக்கு பெருமளவில் பயனளிக்கும்.

அத்துடன் இராணுவப் பயிற்சியின் மூலம் இளைஞர்களுக்குப் பொறுப்புணர்வு மற்றும் அவர்களின் வாய்ப்புகளை விரிவுபடுத்த உதவும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# மன்னாரில் அதிகரிக்கும் தொற்று அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 66 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு இம்மாதம் மட்டும் 49 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டிகைக் காலங்களை ஒட்டி மன்னார் மாவட்டத்தில் மக்களினுடைய நடமாட்டங்கள் அதிகரித்த காரணத்தினால் தற்போது கொரோனாத் தொற்று மாவட்டத்தில் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.

இதுவரையில் மன்னார் மாவட்டத்தில் 66 பேர் தற்போது வரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதத்தில் மாத்திரம் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதார விதிமுறைகளை பின்பற்ற தவறியமை, கை சுகாதாரத்தைக் கடைப்பிடிக்காமை போன்ற செயற்பாடுகள் தொற்றுக்கான மூலகாரணமாக அமைந்துள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 4 கொரோனாத் தொற்று நோயாளர்கள் மிகவும் கடுமையான பாதிப்புடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

தொடர்ந்தும் இவ்வாறு பல தொற்றாளர்கள் வருகின்ற போது இவர்களுடைய உயிர்களைப் பாதுகாக்க எமக்கு மிகவும் கடினமாக இருக்கும்.

எனவே இந்த நிலையை அவதானத்தில் கொண்டு மக்கள் மிகவும் பொறுப்புடனும் ஒத்துழைப்புடனும் நடந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (5-4-285)

# நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் லீக் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் காற்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெட், கபடி லீக் போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அந்தந்த மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி மன்றங்கள் இப் போட்டிகளை ஏற்பாடு செய்யும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்த வருடம் தமிழ்- சிங்கள புதுவருடக் கொண்டாட்டத்தின்போது 25 மாவட்டங்களிலும் ஸ்டாண்டர்ட் சைக்கிளோட்டப் போட்டியும் அரை மரதன் ஓட்டப் போட்டியும் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

"முதல் தரப் போட்டிகளில் விளையாடும் வீரர்களில் பலர் தேசிய மட்ட அணிகளில் இடம் பெறுவதால் அவர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் விளையாடவேண்டிய அவசியம் இல்லை.

மாவட்ட லீக் போட்டிகள் நடத்தப்படுவதன் நோக்கம் யாதெனில், புதிய வீரர்களை தேசிய மட்டத்தில் ஈடுபடச் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதாகும்.

"லங்கா பிறீமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டியைப் போன்று கால்பந்தாட்டப் போட்டி ஒன்றை, தொழில்சார் அதாவது உரிமைத்துவ அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியை இந்த வருடம் நடத்துவது தொடர்பாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துடன் கலந்துரையாடியுள்ளோம்.

அது மட்டுமல்லாமல் சுப்பர் லீக் போட்டியை நடத்துவது குறித்து இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துடன் கலந்துரையாடவுள்ளோம்.

"ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி இந்த வருடம் இலங்கையில் நடத்தப்படும்.

அதே போன்று அணிக்கு எழுவர் கொண்ட ஆசிய பாடசாலைகள் றக்பி போட்டியையும் இங்கு நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் நாளை முதல் பாடசாலை விளையாட்டுக்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

"சகல விளையாட்டுப் போட்டிகளும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# ஊடகங்களால் விளையாட்டுத்துறையோ விளையாட்டுத்துறையால் ஊடகங்களோ பாதிப்பை எதிர்கொள்ளக் கூடாது

(கொழும்பு)

ஊடகம் என்பது விளையாட்டுத்துறையின் முக்கிய பகுதி என்பதால் ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமை கிரிக்கெட் விளையாட்டுக்கு கறுப்புப்புள்ளியை ஏற்படுத்தும் எனவும் முன்னாள் அணித்தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமை தொடர்பில் அதிகமானவர்கள் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் வினவியிருந்தனர்.

ஊடகவியலாளர்களை போட்டிகளின் போது அழைக்க வேண்டாம் என இங்கிலாந்து கிரிக்கெட் நிறுவனம் அறிவித்ததாக அமைச்சர் அதற்கு பதிலளித்தார்.

இது தொடர்பாக சிரேஷ்ட விளையாட்டுத்துறை செய்தியாளர் ரெக்ஸ் கிளைமன்ரைன் இங்கிலாந்து கிரிக்கெட் நிறுவனத்திடம் இது தொடர்பாக வினவிய போது அத்தகைய வேண்டுகோளை நாம் விடுக்கவில்லையென இங்கிலாந்து கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்தது. மேலும் இதற்கான பொறுப்பு இலங்கை கிரிக்கெட் சபைக்கே உள்ளதாகவும் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அடுத்த போட்டிகளை அறிக்கையிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்குமாறு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் வீரர்களின் மன நிலை மிக முக்கியமானது.

அவர்களது திறமையில் தளர்வுகள் இருக்கலாம். ஆனால் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவர்களின் மனோ நிலை பாதிக்கும் வகையில் கருத்து வெளியிடுவது தவறானது எனத் தெரிவித்தார். (4)

# பிரிஸ்பேன் டெஸ்டில் பங்கேற்றது மழை

இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 4-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 369 ரன் குவித்தது. இந்தியா முதல் இன்னிங்சில் 336 ரன் எடுத்தது. ஷர்துல் தாகூர் 67 ரன்னும், வோஷிங்டன் சுந்தர் 62 ரன்னும் எடுத்தனர். ஹாசல்வுட் 5 விக்கெட்டும், ஸ்டார்க், கம்மின்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

33 ரன்கள் முன்னிலையில் 2-வது இன்னிங்சை ஆடிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் 3-வது நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 21 ரன் எடுத்தது. நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. 54 ரன்கள் முன்னிலை, கைவசம் 10 விக்கெட் என்ற நிலையில் அவுஸ்திரேலியா தொடர்ந்து ஆடியது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 294 ரன்கள் எடுத்தது. அதிக பட்சமாக வோர்னர் 48, ஹரிஸ் 38, ஸ்மித் 55 ரன்னும் எடுத்தனர். இந்திய தரப்பில் சிராஜ் 5 விக்கெட்டும் தாகூர் 4 விக்கெட்டும் வீழ்த்தினர். இதனால் 327 ரன்கள் எடுத்தால் இந்தியா வெற்றி பெறும் என்ற நிலையில் இந்திய அணி களமிறங்கியது. ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் மழை பெய்ததால் 4-வது நாள் ஆட்டம் முடித்து வைக்கப்பட்டது. 4-வது நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 4 ரன்கள் மட்டும் எடுத்துள்ளது. இன்றைய இறுதி நாள் ஆட்டத் தில் இந்திய அணி 324 ரன்கள் எடுத்தால் வெற்றி பெறும். (4)

# இலங்கை- இங்கிலாந்து முதல் டெஸ்ட்; இங்கிலாந்து வெற்றி



இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமான இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸ்க்காக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸ்க்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட்டின் 228 ஓட்டங்களின் உதவியுடன் 421 ஓட்டங்களை பெற்றது.

அதனால் 286 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி லஹிரு திரிமான்னவின் சதத்தின் உதவியுடன் 359 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 74 ஓட்டம் என்ற இலகுவான வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டது.


இந்த இலகுவான வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 24.2 ஓவரில் மூன்று விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 76 ஓட்டங்களை பெற்று, வெற்றியிலக்கை கடந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் தெரிவானார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி அதே மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# நாட்டில் இறக்குமதிக்குத் தடை; உழுந்து விலை உயர்வு

(கொழும்பு)

**நாட்டில் உழுந்து இறக்குமதிக் குத் தடை விதிக்கப்பட்டதையடுத்து, சந்தையில் உழுந்தின் விலை அதி கரித்துள்ளது.**



உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில், கடந்த வருடம் பல பொருட்களுக்கு அரசாங்கத்தினால் இறக்குமதித் தடை விதிக்கப்பட்டது. இதனடிப்படையில், உழுந்து இறக்குமதிக்கும் கடந்த ஜுன் மாதம் முதல் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், நாட்டின் உழுந்து விலை அதிகரித்துள்ளதுடன், உழுந்திற்கு பாரிய தட்டுப்பாடும் நிலவுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட காலப்பகுதியில் 300 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு கிலோ உழுந்து, தற்போது சுமார் 2,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். உழுந்து விலை அதிகரிப்பினால் சைவ உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது.

இலங்கையின் உழுந்து பயிர்ச்செய்கைக்குப் பிரசித்தி பெற்ற இடங்களில் வவுனியாவும் ஒன்று. எனினும், வவுனியாவில் சுமார் 13,500 ஏக்கரில் உழுந்து விதைக்கப்பட்ட நிலையில், மழை வெள்ளத்தால் உழுந்துச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் எந்த உணவுப் பொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை என, விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இராஜாங்க அமைச்சருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)



இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவிற்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவருடன் தொடர்புடைய பத்து ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-4)

# நெற்செய்கையில் பரவும் ஒருவகை நோய் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் பாதிப்பு

(கொழும்பு)

பெரும்போக நெற்செய்கையில் பரவிவரும் ஒருவகை நோய் காரணமாக விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். புத்தளம் மல்லம, சேருகல கிராம உத்தியோகத்தர்பிரிவுக்குட்பட்ட மதவாகுளம் பகுதியில் ஐந்தாயிரம் ஏக்கர் நிலப்பகுதியில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் பயிர்களில் இந்நாட்களில் பரவிவரும் ஒரு வகை நோய் காரணமாக நெற்செய்கை பாதிக்கப்பட்டு காணப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

500 ஏக்கருக்கும் மேற்பட்ட விளைநிலங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். அத்துடன் தாம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவிவசாயிகள்கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-4)

# இறப்பர் உற்பத்திக்கான முதலீடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈட்டப்படும் வருமானமானது தேயிலைப் பயிர்ச்செய்கையில் கிடைக்கப்பெறும் வருமானத்தைக் காட்டிலும் விரைவில் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இறப்பரின் முதல் தர ஆர்.எஸ்.எஸ்.வர்த்தகத்தின் விலையானது முன்னதாக 230 ரூபாவாக காணப்பட்டபோதிலும் தற்போது 400 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதனால் அதிகளவானோர் இறப்பர் உற்பத்தியை மேற்கொள்ள ஆர்வம் காட்டுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் இறப்பர் உற்பத்திக்கான முதலீகள் அதிகரித்துள்ளமையால் அதன் செய்கையில் அதிகளவில் இலாபம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (நி-4)

# பாராளுமன்ற அமர்வுகளில் ரஞ்சனை பங்கேற்க வைக்க நடவடிக்கை

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, சபை அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்குமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் தனது டுவிட்டர் பக்கத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த டுவிட்டர் பக்கத்தில் அவர் கூறியுள்ளதாவது "ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்ற கூட்டங்களில் சமுகமளிக்க அனுமதிக்குமாறும், இது நீதிமன்ற வரம்புக்கு வெளியே பாராளுமன்றத்தின் உரிமை என்ற அடிப்படையில், சபாநாயகரை ஐக்கிய மக்கள் சக்தியான எதிரணி அதிகாரபூர்வமாக கோரும்" என பதிவேற்றியுள்ளார். (நி-4)



# மோதிக்கொண்டன பேருந்துகள்




(கல்முனை)

மட்டு - கல்முனை பிரதான வீதியில் இரு தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் பேருந்துகளுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் தெரியவருகையில்,

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் ஆரையம்பதியில் இரண்டு தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இரு பேருந்துகளுக்கும், பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன், அரசாங்க கட்டடமொன்றிற்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை 7 மணியளவில் கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று, ஆரையம்பதி கமநல சேவைகள் திணைக்கள அலுவலகத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு தனியார் பேருந்து மீது பின்பக்கமாக மோதியதில் இரு பேருந்துகளுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன் கமநல சேவைகள் திணைக்கள அலுவலகத்தின் மதில் மற்றும் பிரதான கதவுகள் உடைந்து நொருங்கி சேதமடைந்துள்ளன.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர். (நி-4)

# பசறையில் மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

(பதுளை)

பசறை பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் மாணவர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

ஹொப்டன் மற்றும் கமேவெல பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் இருவருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை அடுத்து குறித்த மாணவர்கள் இருவரையும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த மாணவர்களுடன் நெருங்கிய தொடர்புடையோரை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பசறை பிரதேச பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (நி-4)

# 600 இற்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 45 ஆயிரத்து 820 ஆக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 649 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில்இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 62 ஆக உயர்ந்துள்ளது. இதில் 6 ஆயிரத்து 992 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 757 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 264 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வல்வையில் விபத்து ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

வல்லைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற சைக்கிள்- மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் வல்லைப் பகுதி முனியப்பர் கோயிலுக்கும் வல்லைப் பாலத்திற்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

சம்பவத்தில் இமையாணன் பகுதியைச் சேர்ந்த 29 வயது நபரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (5-60)

# ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானத்தில் இடம்பெறும் வாராந்தச் சொற்பொழிவு எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணியளவில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறும்.

சிவநெறிச் செம்மல் இறைபணிச்செல்வி திருமதி மா.அனந்தலட்சுமி "பஞ்சயக்ஞ வழிபாடு" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (5)



நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த புகையிரத சேவைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய புகையிரத சேவைகள் 25 ஆம் திகதி தொடக்கம் படிப்படியாக ஆரம்பமாகவுள்ளன. (படம்:-சிவசாந்தன்)

# சபைகளின் உபகுழு தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிநகரசபை மற்றும் பிரதேசசபைகளில் 2021 ஆம் ஆண்டிற்கான உப குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் சபைகளில் இடம்பெற்ற ஆரம்ப அமர்வுகளின்போதே உப குழுக்கள்தெரிவு இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபைக்கான உப குழு க்கள் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையிலும் சாவகச்சேரி பிரதேச சபைக்கான உப குழுக்கள் தவிசாளர் க.வாமதேவன் தலைமையிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளில் நிதிக்குழு, அபிவிருத்திக் குழு, தொழில்நுட்பக்குழு, சுகாதாரக் குழு மற்றும் சந்தைக்குழு ஆகிய உப குழுக்கள் இயங்கு நிலையில் காணப்படுகின்றன.

இருப்பினும் மகளிர் அபிவிருத்திக் குழு என மேலதிகமான குழு ஒன்றும் பெயரளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# கழிவு ஒயில் பாதிப்புக்குள்ளான பகுதிகளை மீண்டும் பரிசோதிக்க கோரிக்கை

(குப்பிழான்)

**கழிவு ஒயில் பாதிப்புக்கு காரணமான நொதேர்ன் பவர் நிறுவனத்தை மீளவும் இயங்க வைக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.**

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமையால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது குடிநீர் விநியோகம் இடம்பெறும் பகுதிகளில் கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகள் நீர்களில் தற்போதும் கழிவு ஒயில் கலந்து காணப்படுகின்றதா? இல்லையா? என்பதை உறுதிப் படுத்துமாறு கோரிக்கை முன் வைத்தனர்.

சுன்னாகம் மற்றும் ஏழாலையின் சில பகுதிகளில் மாத்திரம் தற்போது குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன் குடிநீர் வழங்கப்பட வேண்டிய இடங்களிலும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, பிரதேச சபை, பிரதேச செயலகம் என்பன பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த போதும் தற்போது வலி.தெற்குப் பிரதேச சபை மாத்திரமே மேற்படி பகுதிகளில் நீர் விநியோகத்தை மேற்கொண்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.


கடந்த பத்து வருடங்களாக சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு தொடர்ந்து வருகின்ற நிலையில் பாதிப்புக்கு காரணமான நிறுவனம் வழங்கும் நட்ட ஈட்டை ஏற்கத் தயாரில்லை எனவும், பாதிக்கப்பட்ட மக்களால் தான் நட்டஈடு கோர முடியும் எனவும் மக்கள் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கமைய நிலத்தடிநீர் மாசினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நொதேர்ன் பவர் நிறுவனம் மூலம் பரீட்சார்த்த நடவடிக்கையாக வழங்கும் நிவாரணத்தையே வழங்க முடியும்.

மாறாக நட்ட ஈட்டை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை எனவும், இதற்கான முழுமையான தீர்வையே எதிர்பார்க்கின்றனர் எனவும் தெரிவித்தனர். தற்போது நீர் விநியோகம் இடம்பெறும் பகுதிகளில் நிலத்தடிநீரில் கழிவு ஒயில் உள்ளதா? இல்லையா? என்பதைக் கண்டறியும் வகையில் பரிசோதனைகள் முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நொதேர்ன் பவர் நிறுவனத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களைச் சீர்செய்வதற்கு அந்த நிறுவனம் எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில், இவ்வாறான நிலத்தடி நீர்ப் பாதிப்புக்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்தாத நிலையில் நொதேர்ன்பவர் நிறுவனத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு மக்கள் அனுமதி வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் விடயத்தைச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டு செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் நிலத்தடி நீர் மாசினால் பாதிக்கப்பட்டிருந்தும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மீண்டும் நீர் விநியோகம் மேற்கொள்வது தொடர்பில் பிரதேச செயலாளர் பாதிக்கப்பட்ட மக்களுடனும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனும் கலந்துரையாடி இது தொடர்பான முடிவை மேற்கொள்வது எனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5-18)



தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனின் நூற்று நான்காவது பிறந்த தினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கொண்டாடப்பட்டது. எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகனான சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நிகழ்வில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொண்டார்.

# மூடப்பட்டிருந்த பொதுச்சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டன






(நல்லூர்)

கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்ததன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த பொதுச்சந்தைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு வழிகாட்டல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் மூடப்பட்டிருந்த பொதுச் சந்தைகள் நேற்று திறக்கப்பட்டன. (5)

# தலதா மாளிகை ஊழியர்களின் பி.சி.ஆர்.முடிவு வெளியாகியது



(கண்டி)

கண்டி, தலதா மாளிகை ஊழியர்கள் எவரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தலதா மாளிகைக்கு வருகை தரும் பக்தர்களை திரையிடுவதற்கான சிறப்பு சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளும் தற்போது நடைமுறையில் உள்ளன.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட பி.சி.ஆர்.சோதனை முடிவுகள் தலதா மாளிகை வளாகத்தில் கடமையில் இருந்த பல பொலிஸார் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியதாக வெளிப்படுத்தியது.

தற்சமயம் பாதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே தலதா மாளிகை ஆலய ஊழியர்களிடம் கொரோனாப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொவிட் தொடர்பான அறிக்கையில் சந்தேகம் சுகாதார அமைச்சர் பதவி விலக வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



(கொழும்பு)

அரசாங்கம் நாளாந்தம் வெளியிடும் கொரோனாத் தொற்று நிலவரம் தொடர்பான அறிக்கை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளால் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட கொரோனாத் தொற்றுகள் இப்போது கண்டியில் உள்ள புனித இடங்களில் பரவி வருவதாகவும் அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் தவறான அணுகுமுறையினால் 260 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆகவே இந்த இறப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் உடனடியாக சுகாதார அமைச்சர் பதவி விலக வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (நி-4)

# பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு சுமார் 6 பில்லியன் செலவு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்று தொடங்கிய காலப் பகுதியிலிருந்து இதுவரை நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைக்காக அரசாங்கம் ரூபா 6.48 பில்லியனை செலவிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் தொடங்கிய கொரோனாத் தொற்றை அடுத்து நேற்று முன்தினம் வரை 14 இலட்சத்து 86 ஆயிரத்து 951 பேருக்கு பி.சி.ஆர்.சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இலங்கையில் 22 அரசு நிறுவனங்கள் மற்றும் 7 தனியார் வைத்தியசாலைகள் பி.சி.ஆர்.சோதனைகளை நடத்துகின்றன.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 741 பி.சி.ஆர்.பரிசோதனைகளையும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்ட ஆய்வகம் ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 981 பி.சி.ஆர்.பரிசோதனைகளையும் நடத்தியுள்ளது.

இலங்கையில் கொவிட் தொற்றால் நேற்றுவரை 264 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் 53 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-4)

# டிப்போ சாரதிகளுக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

அங்கொடை இலங்கை போக்குவரத்து சபை டிப்போ சாரதிகள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, டிப்போ ஊழியர்கள் 19 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் ஏ.எச். பண்டுக ஸ்வர்ணஹங்ச தெரிவித்துள்ளார்.

நாட்டில் மேலும் சில இ.போ.ச.டிப்போக்களின் ஊழியர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

# செங்கலடி பிரதேச சபை த.தே.கூட்டமைப்பின் வசமானது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச சபையின் தவிசாளராக சின்னத்துரை சர்வானந்தன் ஆறு மேலதிக வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு - ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு, நேற்று திங்கட்கிழமை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ந.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

31 பிரதேச சபை உறுபினர்களைக் கொண்ட குறித்த பிரதேச சபையில் ஏற்கனவே தவிசாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ந.கதிரவேல் பதவி வகித்தார்.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, தோற்கடிக்கப்பட்டமையினால் உள்ளூராட்சி சபைகள் சட்டத்தின் பிரகாரம் தவிசாளர் பதவி இழக்கப்பட்டது.

புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்காக திறந்தவெளி வாக்கெடுப்பிற்கு விடுவதா? அல்லது இரகசிய வாக்கெடுப்பிற்கு விடுவதா? என்பது குறித்து கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் உறுப்பினர்களிடம் கோரப்பட்டது. இதற்கு திறந்தவெளி வாக்கெடுப்பிற்கு விடுமாறு கோரியிருந்தனர்.

இதன்போது வாக்கெடுப்பிற்கு போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் சி.சர்வானந்தனை, வ.சந்திரவர்மன் (த.தே.கூ.) முன்மொழிய அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பி.சபை உறுப்பினர் சி.சிவானந்தன் (த.தே.கூ.) வழிமொழிந்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ந.திருநாவுக்கரசுவை, நா.மோகன்ராஜ் (த.ம.வி.பு.) முன்மொழிய அதை உறுப்பினர் க.லோகிதராஜா (த.ம.வி.பு.) வழிமொழிந்தார்.


6 மேலதிக வாக்குகளால் சி.சிவானந்தன்(த.தே.கூ.) தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கு.ஹிரிதரன் ஆகியோர் சபைக்குள் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 450 | 500 |
| தக்காளி | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 |
| கோவா | 70 | 80 |
| கரட் | 120 | 200 |
| பூசணி | 80 | 200 |
| புடோல் | 120 | 160 |
| வாழைக்காய் | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 |
| பாகற்காய் | 300 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 |
| பயற்றங்காய் | 300 | 250 |
| லீக்ஸ் | 100 | 120 |
| பீற்றூட் | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 320 |
| முருங்கைக்காய் | 130 | — |
| போஞ்சி | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 50 |
| தேசிக்காய் | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 320 |
| முள்ளங்கி | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 |


# இந்த ஆண்டின் அதிகபட்ச கொரோனா நோயாளர்கள் பதிவு



(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டில் ஒரே நாளில் அதிகபட்ச கொரோனா நோயாளர்கள் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளனர். அதன்படி 763 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-4)

## விபத்தில் ஒருவர் படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் நகர்ப்பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்து தொடர்பாக தெரியவருகையில்,குறித்த நபர் செட்டி குளம் நகர்ப்பதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற போது மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது. இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் செட்டிகுளம் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பாக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (5-299)

## மழையற்ற காலத்தில் அறுவடை செய்யவும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

மழையற்ற காலத்தில் அறுவடைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக திணைக்களத்தால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மழையுடனான காலநிலை 18.01.2021 தொடக்கம் 24.01.2021 வரையான ஒருவார காலப் பகுதியில் பெய்யாது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன் பின்னர் 25.01.2021 தொடக்கம் 07.02.2021 வரையான காலப்பகுதியில் மழை மீண்டும் பெய்யும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனவே அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களை இன்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி 24 வரையிலான காலப் பகுதியில் அறுவடை செய்து இழப்புகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கமநல அபிவிருத்தித் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (5-299)

## விபத்துக்களைத் தவிர்க்க
### கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரத்தில் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக விடப்படும் கால்நடைகள் மற்றும்பண்ணையாளர்களால் மேய்ச்சலுக்காக வீதிகளில் கட்டப்படும் கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுவதுடன் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன எனவும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரத்தின் ஏ-9 வீதி முறிகண்டி முதல் பரந்தன் வரை ஏ-35 வீதியின் பரந்தன் சந்தி முதல் விசுவமடு வரை பூநகரி வீதி, கனகபுரம் வீதி ஆகிய பகுதிகளில்பெருமளவான கால்நடைகள் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக விடப்படுகின்றன.

அத்துடன் மேய்ச்சலுக்காக வீதியோரங்களில் கட்டி விடப்படும் கால்நடைகள்இரவுவேளைகளிலும் அவ்வாறே கட்டி விடப்படுவதனாலும் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன. தனியார் விடுதியொன்றில் பணியாற்றி விட்டு வீடு திரும்பிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் ஏ-35 வீதியில் இரவு கட்டி விடப்பட்டிருந்த மாட்டில் மோதி உயிரிழந்தார்.

அத்துடன் விபத்து ஏற்பட்டு பலர் காயமடைந்தும் உள்ளனர். இவற்றை விட கால்நடைகளும் விபத்துக்களில் சிக்கி உயிரிழக்கின்றன.

எனவே இவ்வாறு வீதிகளில் கட்டாக்காலிகளாக திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை இரவு வேளைகளில் கட்டிப் பராமரிக்க வேண்டும் எனவும் திணைக்கள அதிகாரிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப்பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-315)

## இறங்கு துறைகளை அபிவிருத்தி செய்ய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் மீன்பிடி இறங்கு துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்தில் உள்ள கடற்தொழில் கிராமங்களில் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய வகையில் இறங்குதுறைகள் இன்மையால் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீன்பிடி கிராமங்களில் மீன்பிடி இறங்குதுறைகளை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட நாச்சிக்குடாகடற்தொழில் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட இரணைமாதா நகர் இறங்கு துறை மற்றும் கிராஞ்சி பகுதியில் மூன்று இறங்கு துறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ஒன்பது மில்லியன் ரூபாய் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பூநகரி கடற்தொழில் பரிசோதகர் பிரிவில் உள்ள செட்டியகுறிச்சி இறங்குதுறை அபிவிருத்திக்கு 5 மில்லியன் ரூபாய் தேவை யெனவும் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இறங்கு துறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத் தொழில்களை முன்னெடுப்பதற்கு இலகுவாக இருக்கும் என மீனவ அமைப்புக்கள்,மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (5-315)

## வவுனியாவில் முடக்கத்தில் இருந்த சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன

(நெளுக்குளம்)

வவுனியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஊரடங்குசட்டம் அமுல்படுத்தப்பட்ட பல பகுதிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. வவுனியா பட்டாணிச்சூரை சேர்ந்தவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த கிராமம் கடந்த நான்காம் திகதி முதல் முடக்கப்பட்டிருந்தது. அதேபோல வவுனியா நகரப்பகுயில் தொற்றாளர்கள் அதிகரித்துவந்த நிலையில் பிரதான நகரம் உட்பட்ட 19 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் கடந்த ஒருவாரமாக அமுல்படுத்தப்பட்டிருந்தது.

அவற்றில் பசார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதி, கந்தசாமிகோவில் வீதி, மில் வீதி, சூசைப்பிள்ளையார்குளம் வீதிகள் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பகுதிகள் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டுள்ளதுடன்பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹொறவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்கள் மற்றும் தினச்சந்தை ஆகியன திறக்கப்படாத நிலையில் குறித்த வீதியால் பொதுமக்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நகரின் பல பகுதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் காலையிலேயே அதிகமான பொதுமக்கள் பல்வேறு தேவைகள் நிமித்தம் நகரிற்குள் வருகை தந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. அநேகமான பாடசாலைகளில் மாணவர் வரவு மிகவும் குறைவாக காணப்பட்டது. (5-299)

## சந்தையில் களவு



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளம் பொதுச் சந்தையில் நேற்று முன்தினம் இரவு 17.01.2021 களவு இடம் பெற்றுள்ளது. சந்தையில் உள்ள இரு மரக்கறிக் கடைகள், ஒரு தேநீர் கடை என்பன உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதுடன் சந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிதிவண்டியும் களவாடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நடைபெற்ற சந்தைப் பகுதிக்கு விரைந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் மாங்குளம் பொலிசாருக்குத் தகவல் வழங்கினார்.

அதனையடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (5-350)



**மடு வலய கல்வி அலுவலகத்தில் தேசிய கல்வியியல் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த 61 ஆசிரியர்களுக்கு நேற்று நியமனம் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் சிரேஸ்ட உதவி செயலாளர் திருமதி .அஞ்சலி சாந்தசீலன் மற்றும் வலய கல்வி அலுவலக அதிகாரிகள் , ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.**

## இராசிபலன்

19.01.2021
தை 06, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பிற்பகல் 1.07 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 12.04 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சந்திராஷ்டமம்:- மகம், பூரம்
அமிர்தசித்தம்

வளவன்


மேஷம்

கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மிதுனம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், போசன சுகமுண்டு.


கடகம்

பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உடல் நலன் சீராகும், புகழ்மிக்கவர்களின் சந்திப்புண்டு.


சிம்மம்

சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வார்த்தைகளில் நிதானம் தேவை, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.


கன்னி

பொறுமையால் பெருமை சேரும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.


துலாம்

பொதுவாழ்வில் புகழ் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிரியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


விருச்சிகம்

இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், முன்னேற்றம் கூடும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள்.


தனுசு

பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப விரயம் கூடும் நாள்.


மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.


கும்பம்

எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

அமைதியாய் இரு. விரும்பியதை அடையலாம்.

# ஹோட்டல், விமானக் கட்டணங்களுக்கு விரைவில் தீர்வு-இராணுவத் தளபதி

(கொழும்பு)

கொவிட் தொற்றின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் போது அவர்கள் முகம்கொடுத்த இரு பிரதான பிரச்சினைகளான விமானக் கட்டண அதிகரிப்பு மற்றும் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்படுபவர்களின் கட்டண அதிகரிப்பு என்பவற்றுக்கு எதிர்வரும் ஓரிரு தினங்களில் தீர்வு வழங்கப்படும் என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.



இது குறித்து ஊடகங்களுக்கு அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

இதுவரையில் சுமார் 73,000 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். தற்போது அவர்களை அழைத்து வருவதில் முறையான திட்டமிடலொன்று பின்பற்றப்படுகிறது. எனினும் கடந்த ஒன்றரை மாத காலமாக நாட்டில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுவதால் வைத்தியசாலைகளில் நெரிசல் நிலை ஏற்பட்டது. இதனால் தனிமைப்படுத்தல் நிலையங்கள் பலவும் இடைநிலை பராமரிப்பு நிலையங்களாக மாற்றப்பட்டன.

இவற்றில் எவ்வித அறிகுறிகளும் இன்றி தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இதனால் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்படுவோரின் எண்ணிக்கை குறைவடைந்தது. இந்தச் சிக்கல் காரணமாக வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படும் இலங்கையர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்தது. எனினும் தற்போது அந்த நிலைமை சீராகியுள்ளது. கடந்த ஓரிரு வாரங்களாக நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கையர்களை அழைத்து வரும் செயற்பாடுகள் இரு வழிமுறைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விமானத்தில் வருபவர்கள் முப்படையினரால் அரச செலவில் நிர்வகிக்கப்படுகின்ற தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்து செல்லப்படுகின்றமை ஒரு வழிமுறையாகும். மற்றையது வெவ்வேறு நாடுகளிலிருந்து வெவ்வேறு விமானங்கள் மூலம் இலங்கையர்கள் வருகை தருவதாகும். இதன்போது ஒவ்வொரு விமானங்களிலும் சுமார் 75 பேர் அழைத்து வரப்படுகிறார்கள். இவர்கள் மாத்திரமே ஹோட்டல்களில் தங்க வைக்கப்படுகிறார்கள்.

இதன்போது வழமையாக சுமார் 300 பயணிகளுடன் வரும் விமானத்தில் 50 பயணிகள் மாத்திரமே அழைத்து வரப்படுவதால் வழமைக்கு மாறாக அதிகளவான கட்டணம் அறவிடப்படுவதாகக் கூறப்பட்டது. இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் உரிய தரப்பினரிடம் கலந்துரையாடி அவ்வாறு அதிகளவான கட்டணம் அறவிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து இந்த விமான கட்டணங்கள் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும் போது அறவிடப்படும் கட்டணம் தொடர்பிலும் வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. 4 - 5 நட்சத்திர ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுவோருக்கு 7,500 ரூபாய் அறவிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. வெளிநாடுகளிலிருந்து வருபவர்களில் சிலர் இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படுகின்ற தனிமைப்படுத்தல் நிலையங்களை விட தாம் தனி அறைகளில் இருப்பதை விரும்புவதாகத் தெரிவித்தனர். அவ்வாறானவர்களே ஹோட்டல்களில் தங்க வைக்கப்படுகிறார்கள்.

எனினும் ஹோட்டல் உரிமையாளர்கள் அதிக கட்டணத்தை அறவிடுவதாக முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து ஜனாதிபதி தலைமையில் ஹோட்டல் உரிமையாளர்களுடன் விசேட சந்திப்பொன்று கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இதன்போது அதிகளவான கட்டணத்தை அறவிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதோடு 4 - 5 நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் அதற்கு அடுத்த மட்டத்திலுள்ள ஹோட்டல்களில் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பிலும் யோசனை முன்வைக்கப்பட்டது. அதற்கமைய எதிர்வரும் ஓரிரு தினங்களில் கட்டணங்கள் குறைக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# விளக்கமறியலில் இருந்தவரின் வங்கிக் கணக்கில் 62 மில்லியன் கொடுக்கல்-வாங்கல்கள்

## குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

முகப்புத்தகத்தின் ஊடாக இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் பதிவுகளை பதிவிட்டதற்காக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட வியாபாரியை உடனடியாக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் மொஹமட் மிஹார் நேற்று சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரின் வங்கி கணக்கில் சந்தேகத்திற்கிடமான முறையில் பாரிய அளவிலான கொடுக்கல்-வாங்கல்கள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ள காரணத்தினால் அவரை 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கோரிக்கையை ஏற்ற நீதவான், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த சந்தேக நபரை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்குமாறு சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நபரின் வங்கி கணக்கை அவதானித்ததில் கடந்த காலத்தில் 625 இலட்சம் ரூபாவிற்கு அதிகமான பணக் கொடுக்கல்-வாங்கல்கள் இடம்பெற்றுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளனர். (நி-4)

# நாளை பதவியேற்கிறார் ஜோ பிடன்

## ❖கலவரங்கள் ஏற்படலாம் என உளவுத்துறை எச்சரிக்கை
## ❖உசார் நிலையில் இராணுவம்
## ❖7 அடுக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பிடன் நாளை புதன்கிழமை பதவியேற்கவுள்ள நிலையில், தலைநகரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் ஜோ பிடன் வெற்றி பெற்று, அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

நாளை 20 ஆம் திகதி அவர் பதவியேற்கவுள்ளார். இந்தத் தேர்தலில் குடியரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய




ஜனாதிபதி ட்ரம்ப் ஆரம்பத்தில் தனது தோல்வியை ஏற்றுக் கொள்ளாமல் பிடிவாதமாக இருந்து வருகிறார்.

இதற்கிடையில், தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பிடனுக்கு வெற்றி சான்றிதழ் அளிப்பதற்காக அமெரிக்க பாராளுமன்றத்தில் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது பாராளுமன்ற கட்டடத்திற்குள் நுழைந்த ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதனிடையே ஜோ பிடனின் பதவியேற்பு விழாவும் பாராளுமன்ற கட்டடத்திலேயே நடைபெறவுள்ளது. ஜோ பிடன் பதவியேற்பு விழாவின் போதும் பாராளுமன்றத்தில் ஆயுதம் ஏந்திய நபர்கள் தாக்குதல் நடத்தலாம் என அமெரிக்க உளவுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து பாராளுமன்ற கட்டடம் முழுவதுமே பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஜோ பிடன் பதவியேற்பு விழாவின் போது, பாராளுமன்ற கலவரத்தை போல நாடு முழுவதும் உள்ள 50 மாகாணங்களிலும் வன்முறை சம்பவங்களை நிகழ்த்த ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இதனால் தலைநகர் வோஷிங்டன் மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகள் முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பாராளுமன்ற கட்டடம், அலுவலக கட்டடங்கள், உச்ச நீதிமன்றம் ஆகிய பகுதிகளில் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 25 ஆயிரம் தேசிய பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். ஜோ பிடனின் பதவியேற்பு விழா காரணமாக தலைநகர் வோஷிங்டனில் ஏற்கனவே அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நாடு திரும்பிய நவால்னி கைது



(மொஸ்கோ)

கொலை முயற்சியில் இருந்து உயிர்தப்பிய ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் நவால்னி நாடு திரும்பியதும் கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புடினையும், அவரது அரசின் ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி. இவர் டாம்ஸ்க் நகரிலிருந்து மொஸ்கோவுக்கு விமானத்தில் செல்லும்போது மயங்கி விழுந்தார். உடனடியாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் கோமா நிலைக்கு சென் றார்.

அலெக்சியை கொலை செய்ய அவர் குடித்த டீயில் விஷம் கலந்திருக்கலாம் என்று அவரது ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர்.

மேலும், ரஷ்யாவில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டால் புடின் அரசால் அவரது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்று ஜேர்மனி அழைத்துச் செல்லப்பட்டு தலைநகர் பெர்லினில் உள்ள வைத்திய சாலையில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. தீவிர சிகிச்சைக்கு பிறகு அவரது உடல் நிலை தேறியது.

இந்நிலையில், சிகிச்சைக்கு பின்னர் நவால்னி நேற்று முன்தினம் ஜேர்மனியில் இருந்து ரஷ்யாவிற்கு புறப்பட்டார். ரஷ்யா வந்தால் கைது செய்யப்படலாம் என்ற நிலை இருந்தும், அவர் விமானத்தில் புறப்பட்டு வந்தார். அவரை வரவேற்க அவரது ஆதரவாளர்கள் ஏராளமானோர் மொஸ்கோ விமான நிலையத்தில் காத்திருந்தனர்.

அவர் ஜெரெமெட்வோ விமான நிலையத்தில் வந்து இறங்கியதும் விமான நிலைய பொலிஸாரால் சிறைபிடிக்கப்பட்டார். விமான நிலையத்தில் உள்ள கடவுச்சீட்டு சோதனை அலுவலகத்தில் வைத்து அவரிடம் விசாரணை நடைபெற்றது. பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். நவால்னி கைது செய்யப்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.


நவால்னியின் கைது பற்றிய செய்தி வெளியானதும், ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். நவால்னியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

நவால்னிக்கு விஷம் வைக்கப்பட்டது குறித்து வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென ரஷ்யாவை ஜேர்மனி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்த விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வருகி றது.

நோவிசோக் நச்சுப்பொருளைப் பயன்படுத்தி, அலெக்சியை கொலை செய்ய முயற்சி நடந்ததை பிரான்ஸ் மற்றும் சுவீடன் ஆய்வகங்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக ஜேர்மனி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பிரமாண்ட அணிவகுப்பு வேண்டுமென்கிறார் ட்ரம்ப்

## கோரிக்கையை நிராகரித்தது பென்டகன்



(வோஷிங்டன்)

பிரியாவிடை கொடுக்கும் நிகழ்ச்சியில் பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு வேண்டும் என அமெரிக்க ராணுவ தலைமையிடம் ட்ரம்ப் கோரிக்கை விடுத்தார்.

தற்போதைய ஜனாதிபதி டிரம்பின் பதவிக்காலம் நாளையுடன் நிறைவடைய உள்ளது. வழக்கமாக அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் தனது பதவி காலம் முடிவடையும் போது அவருக்கு பிரியாவிடை கொடுக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதியின் அரசில் இடம்பெற்றிருந்த பலரும் வெளியேறும் ஜனாதிபதி க்கு வாழ்த்து தெரிவித்து பிரியா விடை கொடுப்பார்.

அந்த வகையில், ட்ரம்ப்பின் பதவிக்காலம் நாளையுடன் நிறைவடைவதால் பிரியா விடை நிகழ்ச்சிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த பிரியாவிடை கொடுக்கும் நிகழ்ச்சியில் பிரமாண்ட ராணுவ அணிவகுப்பு நடத்த வேண்டும் என தற்போதைய ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் அமெரிக்க இராணுவ தலைமையகத்தில் கோரிக்கை விடுத்தார்.

ஆனால், ட்ரம்பின் கோரிக்கையை பென்டகன் நிராகரித்துள்ளது. (நி-4)

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

(ஜகார்த்தா)


இந்தோனேசியாவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள 3,676 மீற்றர் உயரம் கொண்ட செமெரு எரிமலை' வெடிக்கத் தொடங்கியுள்ளது.

இந்தோனேசியா நாடு நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் புவித் தட்டுகள் அடிக்கடி நகரும் இடத்தில் அமைந்துள்ளதால் அங்கு நிலநடுக்கங்கள், சுனாமி மற்றும் எரிமலை வெடிப்புகள் அடிக்கடி நிகழ்கின்றன. இங்கு, எந்நேரத்திலும் வெடிக்கக்கூடிய வகையில் 130 எரிமலைகள் உள்ளன. இந்த நிலையில் அதிக மக்கள்தொகையைக் கொண்ட கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள 3,676 மீற்றர் உயரம் கொண்ட செமெரு எரிமலை வெடிக்கத் தொடங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து 5.6 கிலோ மீற்றர் உயரத்துக்கு சாம்பல் புகையை உமிழ்ந்து வருகிறது. எரிமலை வெடிப்பு காரணமாக அதனை சுற்றியுள்ள கிராமங்களில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. மேலும் எரிமலையில் இருந்து வரும் சாம்பல் துகள்கள் காற்றில் கலந்து வருவதால் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளது. இதனால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அதேசமயம் எரிமலை வெடிப்பு தீவிரமடைந்து வரும் நிலையில் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# இவ் வருடத்திற்குள் புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் என்கிறார் பீரிஸ்



(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பு உருவாக்கம் ஒருபோதும் காலம் தாழ்த்தப்படமாட்டாது. இந்த வருடத்தின் இறுதிக்குள் புதிய அரசியலமைப் பொன்றை உருவாக்கி அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

பெரதெனியா - கெட்டம்பே விகாரையின் விகாரஸ்தானிதிபதியுடனான சந்திப்பின் பின்னரே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பானது 43 வருடங்கள் பழைமை வாய்ந்ததாகும். அவ்வாறிருக்கையில் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குதல் என்பது மிகவும் கவனத்துடன் முன்னெடுக்க வேண்டிய விடயமாகும். எனவே தான் ஆரம்பத்திலேயே நாம் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தோம். அந்த நிபுணர்கள் குழுவில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள் அங்கத்துவம் வகிக்கின்றனர். எதிர்வரும் ஓரிரு மாதங்களில் அவர்களது நிலைப்பாடுகளும் பரிந்துரைகளும் எமக்கு கிடைக்கப் பெறும். அதன் பின்னர் பாராளுமன்றத்தில் அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அதனை நாம் ஒருபோதும் காலம் தாழ்த்தப் போவதில்லை. காலம் தாழ்த்தினால் அது பிரயோசனமற்ற செயற்பாடாகும் என பீரிஸ் மேலும் தெரிவித்தார். (நி-4)

# சட்ட விதிகளை உதாசீனம் செய்தால் வைரஸை கட்டுப்படுத்துவது கடினம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் தனிமைப் படுத்தலிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு சட்டவிதிகளை கடைப்பிடிக்க வேண்டும். தனிமைப் படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதன் காரணமாக அங்கு புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டால், அந்த பகுதிகளை தொடர்ந்தும் தனிமைப்படுத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும், அதனால் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியாது என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நீண்டகாலமாக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டு, தற்போது விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளுக்கமைய செயற்பட வேண்டியது கட்டாயமாகும். இதன்போது மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கமைய அனைவரும் ஒன்று கூடி உணவு உட் கொள்ளுதல், கலந்துரையாடுதல் மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடு களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒன்றுகூடி செயற்படுவதால் மீண்டும் அந்தப் பகுதிகளில் வைரஸ் பரவலடைவதற்கான வாய்ப்புள்ளது. அதனால் அத்தகைய செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாதவர்களை அடையாளம் காணுவதற்கான சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)



# நகரசபை உறுப்பினர் உட்பட பத்து பேருக்கு பிடியாணை!

(கொழும்பு)

கொழும்பு நகரசபை உறுப்பினர் குலதிஸ்ஸ கீகனனே மற்றும் 9 பேரை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி தெமட்டகொடையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான கட்டட வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மன்றில் முன்னிலையாகத் தவறிய நிலையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# சுற்றுலாப் பயணிகளால் அதிக வருமானம் கிடைத்தது

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலா பயணிகளை அழைத்து வரும் வேலைத்திட்டம் பாரிய வெற்றி அளித்துள்ளது. கடந்த மூன்று வார காலப்பகுதியில் சுற்றுலா பயணிகளை அழைத்து வரும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 42 கோடி ரூபாயை விடவும் அதிகம் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை வரையில் 9 விமானங்களில் உக்ரேய்ன் சுற்றுலா பயணிகள் 1500 க்கும் அதிகமானோர் இலங்கை வந்துள்ளனர்.

அவ்வாறு வந்தவர்களில் ஒரு பகுதியினர் சுற்றுலாவை முடித்துக் கொண்டு திரும்பிச் சென்றுள்ளனர். அவர்கள் குறைந்தபட்சம் 10 நாட்கள் நாட்டில் தங்கியிருந்தனர்.

அதற்கமைய மூன்று வாரத்தில் சுற்றுலாப் பயணிகளால் நாட்டிற்கு அதிகளவு வருமானம் கிடைத்துள்ளது. (நி-4)

# ராஜிதவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

முன்னாள்அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் ஏனைய இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முகத்துவாரம் மீன்பிடி துறைமுகம் தொடர்பாக 2014 ஆம் ஆண்டு விலை மனு கோரப்பட்டமை குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் போது முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்தை குத்தகைக்கு விட்டமையின் மூலம் அரசாங்கத்துக்கு இழப்பை ஏற்படுத்தியதாக குறித்த மூவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் ஏனைய இருவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான பிணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகளின் கைரேகைகளைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதுடன் குறித்த வழக்கை ஏப்ரல் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாகவும் அறிவித்துள்ளார். (நி-4)

# ஆயுதத் தளபாடங்கள், ராடர் கட்டமைப்பு இலங்கைக்கு வழங்கியது இந்தியா

(கொழும்பு)

தேவையேற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கை விமானப்படைக்கு ஒத்துழைப்பை வழங்க இந்திய விமானப்படை எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிதகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவிடம் விமான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இந்திராமார்க் - 2 ராடர் கட்டமைப்புத் தொகுதி என்பன கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டன.

இதன்போதே உயர் ஸ்தானிகர் இதனைத் தெரிவித்தார்.



இலங்கை விமானப்படை மற்றும் இந்திய விமானப்படை ஆகியவற்றுக்கிடையிலான நட்புறவு நீண்ட காலங்களாக தொடர்புடையவையாகும் தேவையேற்படும் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் இலங்கை விமானப்படைக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்த ஒத்துழைப்பிற்கு இந்தியாவிற்கும் இந்திய விமானப் படைக்கும் , இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் இலங்கை விமானப்படையின் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்வதாக விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண இந்திய உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார். (நி-4)

## தனியார் பேருந்து சேவைகள் வழமைக்கு

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பேருந்து சேவைகள் வழமை போன்று இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## 183 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து க நேற்று முன்தினம் 183 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் 6 விமானங்கள் ஊடாக நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். (நி-4)

## அச்சுறுத்தல் மிகுந்த இடமாகியது மட்டக்குளி




(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் கொழும்பு மாவட்டத்தில் அதிக அச்சுறுத்தல் மிக்க பகுதியாக மட்டக்குளி பகுதி நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

இதன்படி மட்டக்குளி பகுதியில் 51 கொவிட் தொற்றாளர்கள் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் 241 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.(நி-4)

## பெருந்தோட்ட தொழிலாளர்களால் பணிப்புறக்கணிப்பு முன்னெடுப்பு



(ஹற்றன்)

நுவரெலியா மாவட்டத்தின் இரண்டு பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பணிப் புறக்கணிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

நுவரெலியா - கந்தப்பளை - பார்க் தோட்டத்தின் முகாமையாளர் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தியே இந்தப் பணிப்புறக்கணிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

கந்தப்பளை - பார்க் தோட்டத்தின் மூன்று பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும், கொங்கொடியா தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுமே இவ்வாறு பணிப்புறக்கணிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள முகாமையாளரின் இல்லத்தைப் பொதுமக்கள் நேற்றிரவு முற்றுகையிட்டதால்அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதனையடுத்து அந்த பகுதிக்கு பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.(நி-4)

## போதைப்பொருள் விற்பனைக்கு ஒத்துழைத்த பொலிஸ் பரிசோதகர் கைது

(அநுராதபுரம்)

போதைப்பொருள் வர்த்தகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அநுராதபுர குற்ற விசாரணை பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அநுராதபுர தலைமையகப் பொலிஸ் பரிசோதகரினால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 43 வயதுடைய குறித்த பொலிஸ் பரிசோதகரிடம் இருந்து 5 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பொலிஸ் பரிசோதகரை நீதிமன்றில் ஆஜர்படுத்தி 7 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2208

**கவிதா**

110 கிலோ மீற்றர் வேகத்தில போறவன் எல்லாம் பைக் றைடர் இல்லடா..



10 முட்டை வாங்கிட்டு அதை உடைக்காம கொண்டு போறான் பாரு அவன் தான்ட றைடர்...!

**மதன்**

ஏக்கர் ஏக்கராக காணிகள் வாங்குபவனை பார்த்து சிரித்தது சுடுகாடு உன்னை வாங்கப் போவது நான் தான் என்று...!




**தர்மா**




மரியாதையா வீட்ட விட்டு ஓடிடு அது தான் உனக்கு நல்லது...!

**விதுரா**

சூரியன் கண்டிப்பா பெண் தான் மச்சான் எப்பிடிடா சொல்ற...



ஒன்பது கோளும் அதையே சுற்றி வருதே..!

**பைரவன்**

பட்டுச்சேலை வாங்கி கட்டினா எல்லா பொண்ணுக்கும் எடுப்பாகத்தான் இருக்கும்....!



அதை வாங்கிக் கொடுக்கிற கணவருக்குத்தான் கடுப்பாக இருக்கும்...!

**காயத்திரி**

பாம்பு துரத்தினா நேரா ஓடு, புலி துரத்தினா மரத்தில ஏறு, கரடி துரத்தினா பிணம் போல நடி என்று சொல்லிக் கொடுத்த நீங்க



மனைவி துரத்தினா எப்படி தப்பிக்கிறது என்று சொல்லிக் கொடுத்தீங்களா...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உள்நாட்டுப் பிரச்சினைக்கு உள்நாட்டிலே தீர்வு ஜெனிவா வரை செல்ல வேண்டியதில்லை

## தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

**சாந்தி சமாதானம் ஆகியவற்றை எப்படி உருவாக்க வேண்டும்? என்று இலங்கை தாய் மண்ணில் இருந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு நாங்கள் சொல்லிக்கொடுக்க முடியுமே ஒழிய ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து எமது நாட்டுக்கான சாந்தியையும் சமாதானத்தையும் கொண்டு வர வேண்டிய அவசியமே கிடையாது என சர்வமத நல்லிணக்கத்திற்கான பிரதிநிதி பொஹவந்தலாவ தேரர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

எனது குடும்பத்தின் பிரச்சினையை அடுத்த வீட்டுக்கு கொண்டு செல்வதற்கு நான் தயாராக இல்லை. ஒரு குடும்பத்தின் பிரச்சினை அந்த குடும்பத்துக்கு உள்ளேயே முடித்து கொள்ளப்பட வேண்டும் என்று தான் யோசிக்கின்றேன்.

இலங்கை என்பது என்னுடைய குடும்பம். எமது நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு நல்ல போதனைகளை கொடுக்க முடியும். காரணம் இலங்கை திருநாட்டில் நல்ல தர்மங்கள் நிலவுகின்றன அத்துடன் ஜனாஸாக்களை எரித்து விட்டார்கள் என இஸ்லாமிய நண்பர்கள் கவலைப்படவே வேண்டாம்.

இந்நிலை தொடரப் போவதில்லை. கொடிய கொரோனா விஷக் கிருமி முடிவுக்கு வந்த பிறகு ஜனாஸாவை உங்கள் மார்க்கப்படியே இந்த மண்ணில் புதைக்கலாம் என சர்வமத நல்லிணக்கத்திற்கான பிரதிநிதி பொஹவந்தலாவ ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.


மனிதன் இயற்கைக்கு செய்த தவறினால் இயற்கை மனிதனுக்கு கொடுத்த முதலாவது தண்டனை சுனாமி. இரண்டாவது தண்டனை கொரோனா விஷக்கிருமி ஆகும்.

கொடிய கொரோனா இந்த உலகத்தை விட்டு நீங்குவதற்கு எல்லா பிரார்த்தனைகளையும் செய்வோம்.

எமது நாட்டில் கடந்த 80 வருடங்களாக பல பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வுகள் காணப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# நக்கிள்ஸ் மலைத் தொடரில் வேட்டையாடப்படும் எருமைகள்

(கொழும்பு)



உலக பாரம்பரிய நக்கிள்ஸ் மலைத் தொடரில் எருமைகள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிட்டவல, பத்தன மற்றும் ரிவர்ஸ்டன் பகுதியின் காடுகளில் படுகொலை செய்யப்பட்ட எருமைகளை அப்புறப்படுத்தியதாகவும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் இந்த மோசடியைத் தடையின்றி நடத்தி வருவதாகவும் குறித்த பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்த சம்பவம் குறித்த தகவல் தமக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (நி-4)

# மின்சாரத்துக்கான கேள்வி அதிகரிக்கும்

(கொழும்பு)

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் மின்சாரத்துக்கான கேள்வி அதிகரிக்கும் என அரசாங்கம் எதிர்பார்ப்பதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கடந்த ஆண்டில் பெரும்பாலான அலுவலகங்கள் மூடப்பட்டிருந்த நிலையில், மின்சாரத்திற்கான தேவை குறைவாகக் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த ஆண்டில் நாட்டின் அனைத்து துறைகளும் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டுவரும் நிலையில் மின்சாரத்தின் தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நிலவக் கூடிய வெப்பமான கால நிலையும் மின்சார நுகர்வை அதிகரிக்கும் ஒரு காரணியாக காணப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இந்த ஆண்டுக்கான மின் உற்பத்தியை திட்டமிட எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கால்பந்தாட்டக் கவலைகள்

ஒரு பெரிய மனிதன், ஒரு கால்பந்தாட்ட விளையாட்டுப் போட்டிக்குப் போனார். அவர் தான் அன்றைக்கு முக்கிய விருந்தினர். ஜெயிக்கிறவர்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டியவர். மிகவும் ஊக்கமாக விளையாட்டுப் போட்டியை கவனித்துக் கொண்டிருந்தார்.

இந்தப் போட்டியைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று அவரிடம் கேட்டார்கள் போட்டி ஏற்பாடு செய்திருந்தவர்கள். இதற்கு அவர் கொஞ்ச நேரம் தீர்க்கமாக யோசித்துவிட்டுச் சொன்னார்...ஒரு பந்திற்காக என்னத்திற்கு இவ்வளவு பேர் அடித்துப் பிடித்துக் கொண்டு நிற்கின்றார்கள்...? ஆளுக்கு ஒரு பந்து வாங்கிக் கொடுத்துவிடலாம் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம் என்றார். மிகவும் விபரமான ஆளாக பார்த்துத் தான் பரிசு கொடுக்க அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

ஆனால் ஒரு விடயம். அவர் சொன்னதில் ஒரு விடயம் உண்மை. ஒரு பந்திற்காக எல்லோரும் அடித்துப் பிடித்துக் கொண்டு நிற்கின்றார்கள் என்று சொன்னாரே அதுதான். இந்த விளையாட்டு விளையாட வேண்டும் என்று நினைத்தால் அடிபடுவதற்கும், காயப்படுவதற்கும் கவலைப்படக் கூடாது. அப்படிப்பட்ட விளையாட்டு இது.

வேடிக்கை பார்க்கின்றவர்களும் மிகவும் உணர்ச்சிவசப்படக் கூடிய விளையாட்டு இது. புட்போல் விளையாடப் போகின்றவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும் என்றால், முழங்கால் பத்திரம், குதிக்கால் பத்திரம் என்று தான் சொல்லி அனுப்ப வேண்டும்.

முழங்கால் எங்கள் உடம்பிலே முக்கியமான ஒரு பகுதி. அதை நாம் இயற்கையாக உபயோகப்படுத்த வேண்டும் என்றால் நீட்டலாம், மடக்கலாம் அவ்வளவுதான். ஒரு பக்கம் தான் மடக்க முடியும். ஆனால் புட்போல் விளையாடுபவர்கள் இந்த முழங்காலை வேறு விதமாகவும் உபயோகப்படுத்துகின்றபொழுது நிலைமை விபரீதமாகிவிடுகின்றது. ஓடுவது, திடீர் என்று திரும்புவது, முறுக்கிக் கொண்டு விழுவது,வளைவது. பாவம் அந்த முழங்கால் எவ்வளவு தான் தாங்கும்.

பல சமயங்களிலே ஒரு கால்பந்தை உதைக்கின்ற பொழுது உடம்பு எடை முழுவதும் இன்னொரு கால் தானே தாங்க வேண்டியிருக்கின்றது. கொஞ்சம் தடுமாறினாலும் சிக்கல் தானே? விளையாடுகின்ற பொழுது முழங்காலிலே அடிபட்டதென்றால் முதலில் செய்ய வேண்டியது என்ன?அடி பலமாக, லேசா என்று முதலில் கண்டு பிடிக்க வேண்டும். அதை எப்படி கண்டுபிடிப்பது? Severe Injury என்றால் அதற்கு சில அடையாளங்கள் உண்டு. வீக்கம், வலி, மூட்டு பிசகிப் போவது-முழங்காலை நீட்ட முடியாது. இப்படி இருந்தால் அது Major அப்படி இல்லை என்றால் அது Minor.

சாதாரண அடி என்றால் அதற்கு ஐஸ் ஒத்தடம் கொடுத்தால் போதும். பின்பு ஒரு Knee cap போட்டு விட்டு மறுபடியும் விளையாட விட்டுவிடலாம். அடி கடுமையாக இருந்தால் அவரைப் பேசாமல் தூக்கிக் கொண்டு ஒரு Sports Doctor இடம் போயிட வேண்டியது தான். தசை சிதைத்து போயிருக்கிறதற்கு வலி ஒரு அடையாளம். வலித்தால் ஓய்வு எடுத்துக் கொள் என்று உடம்பு சொல்வதா அர்த்தம்.

அந்த சமயத்திலே அதைப் புரிந்து கொள்ளாமல் சும்மா வலியை மறப்பது என்று ஏதாவது மருந்து போட்டுக் கொண்டு, மறுபடியும் விளையாட்டிலே இறங்கினால் அது இடைஞ்சலில் கொண்டு வந்து விட்டுவிடும். காயம் பெரிதாக ஆகிவிடும்.

Arthroscopic Surgery இப்பொழுது மிகவும் முன்னேறியிருக்கின்றது. டாக்டர் என்ன செய்கின்றார் என்றால் ஒரு சின்ன டெலஸ்கோப்பை முழங்கால் மூட்டுக்குள்ளே செலுத்துகின்றார். அந்த இடத்திலே வலி மரப்பு மருந்து போட்டுக் கொண்டு தான் ஒரு T.V,Monitor இலே பார்க்கின்றார். உள்ளே என்ன கோளாறு என்பது தெரிகின்றது.

ஒரு ஆப்பரேஷன் செய்து பார்க்க வேண்டியதை சுலபமாக T.V. யிலே படம் பார்ப்பது மாதிரி பார்த்துவிடுகின்றார். சில உபகரணங்களை இன்னொரு குழாய் மூலமாக உள்ளே செலுத்தி சிதைவுகளை சரி செய்து விடுகின்றார். மிகவும் சாதாரணமாக இந்த சிகிச்சை முடிந்துவிட்டது. இரத்தம் இல்லை. தையல் இல்லை. பிளாஸ்டர் இல்லை. வைத்தியசாலையில் படுத்துக் கொண்டு காலுக்கு ஊஞ்சல் கட்டிவிட்டு அதையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

சீக்கிரமாக குணமாகிவிடும். கொஞ்ச நாளிலே மறுபடியும் பந்து உதைக்கப் போய்விடலாம். ஒருத்தர் உதைபந்தாட்டம் விளையாடினார். காலிலே சுளுக்கு விழுந்து விட்டது. கொஞ்ச நாள் கழித்து அவரை இன்னொருத்தர் பார்த்தார்.

என்ன சேர்? சுளுக்குக்கு என்ன வைத்தியம் செய்தீர்கள்? என்று கேட்டார்.

ஒத்தடம் கொடுத்தால் சரியாக போய்விடும் என்று சில பேர் சொன்னார்கள். செஞ்சு பார்த்தேன். சரியா வரவில்லை. பச்சிலை தடவினால் சரியா போய்விடும் என்று சில பேர் சொன்னார்கள். செஞ்சு பார்த்தேன் அதுவும் சரியா வரவில்லை.. பின்பு மருந்து தடவினேன். மாத்திரை சாப்பிட்டேன் எதுவும் சரியாக வரவில்லை. கடைசியில் கோபத்தில் காலை உதறினேன் சரியாகப் போய் விட்டது என்றார். பலே ஆள் சேர் நீங்கள்.. அது சரி.. பின்பு ஏன் இன்னமும் காலை இழுத்து இழுத்துவிட்டு நடக்கின்றீர்கள்? என்று கேட்டார் அவர். இது வரைக்கும் நான் சொல்லிக் கொண்டு வந்தது இடது காலுக்கு சேர். வலது கால் சுளுக்கு அப்படியே தான் இருக்கு. அது தான் இழுத்துக் கொண்டு நடக்கின்றேன் என்று சொல்லிவிட்டு அது மாதிரியே நடந்து போய்க் கொண்டிருந்தார் அந்த ஆள்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)



**01**

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

முன்னைய கட்டுரைகளில் உள்ளூராட்சி மன்றங்களின் பரிணாமம் மற்றும் நிர்வாகம் பற்றி எழுதப்பட்டிருந்தது. இக் கட்டுரையில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் மற்றும் தேர்தல் நடைமுறைகளும் பற்றி எழுதப்படுகின்றன.

இலங்கையின் ஆட்சிமுறையிலும் அரசியல் அதிகாரப்பகிர்விலும் குட்டிப்பாராளுமன்றம் என்று வர்ணிக்கப்படுவதும் மக்களின் அரசியல் நுழைவின் ஆரம்ப நுழைவாசல் என்று கூறப்படுவதும் உள்ளூராட்சி மன்றங்களே. உள்ளூராட்சி மன்றங்களின் அடிப்படை நோக்கங்கள் தமது ஆள்புல எல்லைக்குள் வசிக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை நிறை வேற்றலாகும். சுயாட்சியின் முக்கியமான ஒரு அலகாக உள்ளூராட்சி சபைகள் மேலை நாடுகளில் பிரதான பங்கைப்பெற்று நிற்கிறது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் இன்னும் நலிவு நிலையிலேயே காணப்படுகிறது. உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் மாகாண சபைகளின் உருவாக்கத்தினால் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் அமைச்சுக்களும், அரசு முகாமை நிறுவனங்களும் உள்ளூராட்சி சபையின் மேல் தமது அதிகாரத்தை செலுத்துகின்றன.

> **ஜனநாயகம் நிலைத்திருக்கின்ற ஒரு சமுதாயத்திலே மக்கள் ஒருவரோடொருவர் இணைந்து தீர்மானமெடுக்கின்ற ஒரு நிச்சயமான தினமாக அமைவது தேர்தல்கள் நடத்தப்படுகின்ற தினமே ஆகும். அத்தேர்தல்களே அரசியலின் உயிர்த்தோற்றத்தை நேரடியாகக் காணுவதற்கான அனுபவத்தை வழங்குகின்றன.**

## இலங்கையில் சுதந்திரத்திற்கு முன் உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்கள்தெரிவு

இலங்கைக்கு உள்ளூர் அரசாங்கத்தின் (local government) நீண்ட வரலாறு உள்ளது. கி.மு 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆரம்ப கால குடியேற்றங்கள் கிராம அடிப்படையிலானவை என்று கூறப்படுகிறது. இந்தக் கிராமங்களை மன்னர்கள் நிர்வாகத்தின் ஒரு பிரிவாகப் பயன்படுத்தினர். ஒவ்வொரு கிராமமும் சுயாதீனமாக நிர்வகிக்கப்பட்டன. கிராம சபைகள் (கம்சபாக்கள்) உள்ளூர் விவகாரங்களை நிர்வகித்தன, மக்களின் குறைகளை நிவர்த்தி செய்தன, சிறிய மோதல்களை தீர்த்தன. கிராம அடிப்படையிலான நிர்வாகம் பல நூற்றாண்டுகளாக ஒரு வடிவத்தில் தொடர்ந்தது. அன்றைய காலத்தில் கிராம சபைகளின் உறுப்பினர்கள் வசதி மற்றும் செல்வாக்கு பெற்ற குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

> **ஆரம்ப காலத்தில் கிராம சபைகளின் உறுப்பினர்கள் வசதி மற்றும் செல்வாக்கு பெற்ற குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.**

1818 ஆம் ஆண்டில் இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கிராமச் சபைகள் அகற்றப்பட்டன. 1856 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நெற்காணிகள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டளை சட்டம் (Paddy Lands and Irrigation Ordinance No. 9 of 1856) விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்தை மேற்பார்வையிட கிராமச் சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது. கிராமச் சபைகளுக்கு பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட அரச அதிபர் அல்லது உதவி அரச அதிபர் தலைமை தாங்கினார், அவர்கள் கிராம சபைகளின் மற்ற உறுப்பினர்களை நியமித்தனர்.

> **1856 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நெற்காணிகள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டளை சட்டம் விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்தை மேற்பார்வையிட 1818 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட கிராமச் சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது. கிராமச் சபைகளுக்கு பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட அரச அதிபர் அல்லது உதவி அரச அதிபர் தலைமை தாங்கினார், அவர்கள் கிராம சபைகளின் மற்ற உறுப்பினர்களை நியமித்தனர்.**

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள்ளூர் அரசாங்கம் (local government) பல முன்னேற்றங்களைக் கண்டது. நாட்டின் வீதிகளை நிர்வகிக்க 1861ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வீதிக் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் (The Road Committees Ordinance No 10 of 1861) மாகாண வீதிக் குழுக்கள் மற்றும் மாவட்ட வீதிக் குழுக்களை உருவாக்கியது. இந்தக் குழுக்கள் அரசாங்க அதிகாரிகள், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் (appointed members and elected members) கொண்டிருந்தன. வீதிக் குழுக்கள் 1861 முதல் 1951 வரையில் செயற்பட்டன. அதன் பின்னர் அவற்றின் செயற்பாடுகள் பொதுவேலைத் திணைக்களத்திற்கு (Public Works Department) மாற்றப்பட்டன.

> **1861 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வீதிக் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் வீதிக் குழுக்களை உருவாக்கியது. இந்தக் குழுக்கள் அரசாங்க அதிகாரிகள், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. இவ் வீதிக் குழுக்கள் 1951 வரையில் செயற்பட்டன. அதன் பின்னர் அவற்றின் செயற்பாடுகள் பொதுவேலைத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன.**

1865ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (Municipal Council Ordinance No. 17 of 1865) சில உள்ளூர் நிர்வாகத்திற்கான பொறுப்பை உள்ளூர்வாசிகளுக்கு மாற்றியது. ஆரம்பத்தில் மாநகர சபைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தன.

இந்த கட்டளைச் சட்டத்தின் படி ஆரம்பத்தில் கொழும்பு மற்றும் கண்டிக்கு மாநகர சபைகள் உருவாக்கப்பட்டன. இந்த கட்டளைச் சட்டத்தின்படி கொழும்பு மாநகர சபையின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு மாநகரசபை 7 பிரிவுகளாக (இப் பிரிவுகள் மாவட்டங்கள் அல்லது வட்டாரங்கள் என்றும் அழைக்கப்பட்டன.) பிரிக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெற்றன. மாநகர சபையின் தவிசாளராக அரச அதிபர் நியமிக்கப்பட்டார்.

நியமன அங்கத்தவர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். டொனமூர் அரசியலமைப்பு 1931 முதல் நடைமுறைக்கு வந்தது. முழு நாட்டிலும் நிர்வகிக்கப்படும் ஒரு உள்ளூர் அதிகார அமைப்புக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியது. அதன் பிரகாரம் 1936 இல் இயற்றப்பட்ட சீர்திருத்தங்களின் விளைவாக மாநகர சபைகளின் அனைத்து உறுப்பினர்களும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராம சமூகங்கள் கட்டளைச் சட்டம் (The Village Communities Ordinance No. 26 of 1871) உள்ளூர் நிர்வாகத்திற்கான கிராமக் குழுக்களையும் நீதித்துறை நிர்வாகத்திற்காக கிராம நீதிமன்றங்களையும் அறிமுகப்படுத்தியது. உள்ளூர்வாசிகளின் வேண்டுகோளின் பேரில் ஆளுநருக்கும் மற்றும் சட்டமன்றத்திற்கும் (Legislative Council) ஒரு கிராமக் குழுவை உருவாக்க இந்தக் கட்டளைச் சட்டம் அனுமதித்தது. அரசாங்க அதிபர் கிராமக்குழுவுக்கு தலைமை தாங்கினார். மற்றைய உறுப்பினர்கள் அரச அதிபரால் நியமிக்கப்பட்டனர். கிராமக் குழுக்கள் (Village Committees) முன்னைய கிராம சபைகளைப் (Village Councils) போலவே இருந்தன. கிராமக் குழுக்கள் சிறப்பாகச் செயற்பட்டன, 1938 ஆம் ஆண்டில் உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க சட்டத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

> **1865ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர சபை உருவாக்கப்பட்டது. கொழும்பு மாநகர சபையின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு மாநகர சபை 7 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெற்றன. ஆரம்பத்தில் மாநகர சபைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. 1936 இல் இயற்றப்பட்ட சீர்திருத்தங்களின் விளைவாக மாநகர சபைகளின் அனைத்து உறுப்பினர்களும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

தேர்தல் நடத்த வட்டாரங்கள் உருவாக்கப்பட்டு, வட்டாரங்களிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குழுவுக்கான தலைவர் மற்றைய உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின் நில வரி வசூலித்தல், உள்ளூர் சேவைகளான வீதிகள் அமைத்தல், புனரமைத்தல், நீர் வழங்கல், பொதுவான வசதிகள் மற்றும் பொது சுகாதாரம் போன்றவற்றை கிராம மக்களுக்கு வழங்க கிராமக் குழுக்கள் அதிகாரம் பெற்றன.

1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுகாதாரம் பேணல் சபை கட்டளைச் சட்டம் (The Sanitary Boards Ordinance No. 18 of 1892) சிறு நகரங்களில் மின்சாரம், வடிகால், பொது வசதிகள், சந்தைகள், பால் பண்ணைகள், சலவை நிலையங்கள் (laundries) மற்றும் நீர் வழங்கல் போன்ற பல பொதுச்சுகாதார சேவைகளை வழங்க அலகுகளை (bodies) உருவாக்கியது.

(தொடரும்...)

# கொவிட்-19 தடுப்பூசி விவகாரம்

# கொண்டு வருவதில் தாமதம் வேண்டாம்

**(கொழும்பு)**

**கொரோனாத் தடுப்பூசியை நாட்டுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையை மேலும் தாமதப்படுத்த வேண்டாம் என அரசாங்கத்திடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் கொரோனாத் தடுப்பூசியை நாட்டிற்கு கொண்டுவர மேலும் தாமதப்படுத்தினால் எதிர்காலத்தில் பல நெருக்கடிகள் ஏற்படக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சிறிய எண்ணிக்கையிலான சனத்தொகையைக் கொண்டுள்ள இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசியைக் கொண்டுவரும் நடவடிக்கையைத் தாமதப்படுத்தினால் இந்தவருட இறுதிக்குள் அனைவருக்கும் தடுப்பூசியை வழங்க முடியாத நிலை உருவாகும்.

அத்துடன் கொரோனாத் தடுப்பூசியை மக்களுக்கு வழங்குவதன் மூலமே நிம்மதியான வாழ்க்கை முறையை உருவாக்க முடியும்.

மேலும் வாதப்பிரதிவாதங்களை மேற்கொள்வதைத் தவிர்த்து உயர்ந்த தரத்திலான கொரோனாத் தடுப்பூசியை அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன்-எதற்கு - எப்படி



## திருஷ்டிகளை விரட்டும் கருடபார்வை

நாராயணருக்கு வைகுந்தத்தில் சேவை செய்ய எத்தனையோ பேர் இருந்தாலும் அனந்தன் எனப்படும் ஸ்ரீ ஆதிசேஷன், பெரிய திருவடி எனப்படும் ஸ்ரீகருடன், சேனாமுதல்வன் எனப்படும் ஸ்ரீ விஸ்வக்சேனர் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள்.

இவர்களில் ஆதிசேஷன் பெருமாளுக்கு குடையாகவும் சிம்மாசனமாகவும் படுக்கையாகவும் இருக்கிறார். விஸ்வக்சேனர் மகா விஷ்ணுவின் படைகளில் சேனாதிபதியாக விளங்குகிறார்.

ஆனால் ஸ்ரீ கருடனோ பெருமாளுக்கு தோழன், தாசன், ஆசனம், வாகனம், கொடி, மேல்சுட்டு, விசிறி என 7 விதமான தொண்டுகளை செய்பவராக உள்ளார்.

இந்த சிறப்பு காரணமாக கருடனை வைணவர்கள் கருடாழ்வார் என்று போற்றிப் புகழ்கின்றனர்.

கருடனை பெரிய திருவடி கொற்றப்புள், தெய்வப்புள், வேதஸ்வரூபன், காய்சினப்புள், படிசிராஜன், புள்ளரையன், வைநதேயன், ஓடும்புள், சுபர்ணன், விஜயன், உவணன், வினைதச் சிறவன் என பல பெயர்களில் அழைக்கிறார்கள். கருடன் இந்திர லோகத்தில் இருந்து அமிர்தத்தை எடுத்து வந்து தன் தாய் வினதையின் அடிமைத்தனத்தை நீக்கினார்.

அந்த தாயின் அருளால்தான் பெருமாளின் வாகனமாக கருடன் திகழ்கிறார். இவருக்கென்று கருட பஞ்சமி என்ற பண்டிகையும் உள்ளது.

சகோதரர்களின் நலனுக்காக பெண்களால் இப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. கருடனின் அம்சமாக அவதரித்தார் பெரியாழ்வார். ஸ்ரீ வில்லிப்புத்தூரில் வசித்த பெரியாழ்வாரின் மகளாக அவதாரம் எடுத்தவர் ஸ்ரீ ஆண்டாள்.

பெரியாழ்வார் தன் மகள் ஆண்டாளை ரங்கநாதருக்கு திருமணம் செய்து கொடுத்த போது மாப்பிள்ளை அருகில் நின்று கொண்டு தாரை வார்த்துக் கொடுத்தாராம்.

இதன் அடிப்படையில் பெரியாழ்வாரின் அம்சமான கருடாழ்வார் பெருமாள் அருகிலேயே இருக்கிறார் என்பார்கள். இதனால் தான் வைணவத் தலங்களில் கருட கொடி அருகில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கருடனை தரிசனம் செய்த பிறகு பெருமானையும் தாயாரையும் தரிசிப்பதை சம்பிரதாயமாக வைத்திருக்கிறார்கள்.

ஆடி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் கருடன் பிறந்தார். எனவே சுவாதி நட்சத்திர நாட்களில் கருடனை வழிபட்டால் கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவர் எளிதில் கிடைப்பார்.

குழந்தை பாக்கியம் உண்டாகும். ஆலயங்களில் முக்கிய திருவிழாக்கள் நடக்கும் போது மேலே கருடன் பறப்பதைப் பார்த்திருப்பீர்கள். அப்படி கருட தரிசனம் கிடைக்கும் போது கை கூப்பி வணங்க தேவை இல்லை, மனதுக்குள் கருடன் அருள் பெறும் மந்திரங்களை சொல்லி வழிபட்டால் போதும்.

மேலும் கருடனின் பார்வை நம்மீது பட்டாலே போதும். நாம் எடுத்த செயல்கள் எல்லாம் வெற்றிபெறும். கருடனின் பார்வைக்கு "சூட்சும திருஷ்டி" என்று பெயர். அந்தப் பார்வைபட்டால் உங்களை எந்தத் தீய சக்திகளும் திருஷ்டிகளும் தீவினைகளும் நெருங்காது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## விதிமுறைகளை மீறிய விருந்து; கலந்துகொண்டோர் கைது

(பொலநறுவை)

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி விருந்துபசார நிகழ்வில் கலந்துகொண்ட குற்றச்சாட்டில் பொலநறுவை, மெதிரிகிரிய பகுதியில் 54 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். 13 பெண்களும் 41 ஆண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர்.

கைதின்போது மூன்று இளைஞர்கள் போதைப்பொருள் வைத்திருந்ததாகவும் தெரிவித்த பொலிஸார், அவர்களுக்கு எதிராக வழக்கு ஹிங்குராங்கொட நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்றும் கூறினர். (நி-4)

## சதொச முகாமையாளர் பணி நீக்கம்-பந்துல உத்தரவு

(கொழும்பு)

பூஸ்ஸ கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் முகாமையாளரை பணி நீக்குமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன உத்தரவிட்டுள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் பூஸ்ஸ சதொச களஞ்சியத்திற்கு கண்காணிப்பு விஜயமொன்றை அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, விற்பனை நிலையங்களில் காணப்படும் விலையை விட 30 ரூபா குறைவாக சதொச விற்பனை நிலையங்களில் விற்பனை செய்ய உத்தரவிடப்பட்டிருந்த தேயிலை தூள் பக்கெட்டுக்களை விற்பனை செய்யாது மறைத்து வைத்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். இதனூடாக நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நிவாரணத்தை பெற்றுக் கொடுக்காமல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன் காரணமாக பூஸ்ஸ சதொச முகாமையாளரை பணி நீக்கம் செய்து முறையான விசாரணையை மேற்கொள்ளுமாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (நி-4)

## கொரோனா வைரஸ் அச்சம் மூன்று தொழிற்சாலைகள் மூடல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்ச நிலைமை காரணமாக ஹொரணை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள மூன்று தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் 19 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இங்கிரிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹொரணை பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள ஐந்து தொழிற்சாலைகளில் கடந்த வாரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது தொழிற்சாலை ஊழியர்கள் 30 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பி.சி.ஆர்.பெறுபேறுகளின் பிரகாரம் ஹொரணை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள மூன்று தொழிற்சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இங்கிரிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-4)

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 27 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றாமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையிலான காலப்பகுதிக்குள் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 2 ஆயிரத்து 605 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## வெட்டுக்கிளியும் ஆந்தையும்



அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் ஒரு இரக்கமற்ற ஆந்தை ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் மதிய வேளையில் மரப்பொந்து ஒன்றில் அந்த ஆந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் புல் தரையின் கீழே வெட்டுக்கிளி ஒன்று பாட்டுப் பாடிக்கொண்டே வந்தது.

வெட்டுக்கிளியின் அந்த பாட்டுச் சத்தம் ஆந்தையின் தூக்கத்தை கெடுத்தது. உடனே ஆந்தை அந்த வெட்டுக்கிளியிடம், "கொஞ்சம் பாடுவதை நிறுத்து" என்று கேட்டது.

வெட்டுக்கிளியோ அதைக் கேட்காமல் அந்த மரத்தின் கீழே பாடிக் கொண்டிருந்தது. மேலும் ஆந்தையைப் பார்த்து, "நீ கண் தெரியாத குருட்டு பறவை! பகலில் வருவது கிடையாது, எல்லோரும் இரவில் தூங்கிய பின்பு தான் நீ வெளியே வருவாய்" என்று திட்டியது.

தினமும் ஒரே மாதிரியான உணவினை சாப்பிட்டுவந்த ஆந்தைக்கு அந்த வெட்டுக்கிளி சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. தந்திரத்தால்தான் வெட்டுக்கிளியை அடக்க வேண்டும் என்று தீர்மானித்து.

"நண்பனே, என்னைத் தூங்கவிடாமல் நீ செய்ய விரும்பினால் செய்து விட்டுப் போ.

ஆனால் விழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இனிமையாய் இருக்கும் பொருட்டு உன் சங்கீதம் உபயோகப்படட்டுமே! உன் சங்கீதம் இனிமையானது.

அதை அதை இன்னும் மெருகேற்ற என்னிடம் ஓர் அமிர்தம் இருக்கிறது.

அந்த அமிர்தத்தை இரண்டு துளி நீ சாப்பிட்டால் போதும். உன் குரலும் அமிர்தமாய் விடும். மேலே வா தருகிறேன்", என்றது ஆந்தை.

ஆந்தையின் நயவஞ்சக பேச்சைக் கேட்டு மயங்கிய வெட்டுக்கிளி மரத்தில் ஏறி ஆந்தையின் அருகில் சென்றது. அருகில் வந்த வெட்டுக்கிளியை ஆந்தை பிடித்து நசுக்கிக் கொன்றது.

**நீதி: பயமுறுத்தலை விட நயவஞ்சகம் பலமானது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## இதயம் கவர்ந்த இஸ்ஸஸ் யுத்தம்




இந்தமுறை மற்ற பாரசீக மன்னர்களை எதிர்த்து தாக்குதல்கள் தீவிரமாக இருந்தன. விளைவு் மேலும் இரண்டு பாரசீக மன்னர்கள் அலெக்சாண்டரிடம் தங்கள் நாடுகளைப் பறிகொடுத்தார்கள்.

ஒரேயொரு மாற்றம். டயர் என்கிற நாட்டின் மன்னர் மட்டும் சரணடையாமல் எதிர்த்து நின்றான். உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள் என்று சவால் விட்டான். அலெக்சாண்டருக்கு ஆத்திரம் பொங்கியது. நம்முடைய படைகள் உடனே சென்று டயர் இராச்சியத்தைச் சுக்கு நூறாக் கட்டும்.

உத்தரவிட்ட அடுத்த நொடி சிட்டாகப் பறந்தன மாசிடோனியப் படைகள். தாக்குதல்கள் முன்னிலும் வேகமாக நடந்தன. ஒன்றல்ல, இரண்டல்ல மொத்தம் ஏழு மாதங்கள் நடந்த போர் அது. இறுதியாக டயர் அரசு வீழ்ந்தது. வெற்றி. மாமன்னர் அலெக்சாண்டருக்கு வெற்றி.

ருசிகண்ட பூனையாக மாறியிருந்தார் அலெக்சாண்டர். ஆம், வெற்றி என்கிற பால் அவருக்கு ரொம்பவே பிடித்துவிட்டது. அடுத்த குறியை எகிப்து மீது வைத்தார்.

எகிப்தை அலெக்சாண்டர் நெருங்கிய போது அங்கிருந்த மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். பாரசிகர்கள் கொடுத்த அடிமைக் காற்றுக்குப் பதிலாக அலெக்சாண்டர் தாங்கள் சுவாசிப்பதற்கு சுதந்திரக் காற்றைக் கொண்டுவருவார் என நினைத்தனர்.

பார்த்த மாத்திரத்திலேயே அதைப் புரிந்து கொண்டார் அலெக்சாண்டர். அவர்களுடைய இஷ்ட தெய்வங்களை எல்லாம் பய பக்தியோடு வணங்கினார்.

அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அமர்ந்து கேட்டார். எல்லாக் கஷ்டங்களில் இருந்தும் அவர்களை விடுவிப்பதாகக்கூறி அனுசரணையாகப் பேசினார்.

இதனால் எகிப்தியர்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் ஆதரவையும் சுலபமாகச் சம்பாதித்தார் அலெக்சாண்டர். (தொடரும்)

‘வெற்றி பெறுவேன்’, ‘வெற்றி பெறுவேன்’ என்று தொடர்ந்து நம்பிக்கையுடன் சொல்லுங்கள். இந்த வார்த்தைகள் வாய்ப்பு வளங்களையும் வழிமுறைகளையும் தேடிப் பிடித்து கொண்டு வந்து உங்களிடம் சேர்த்துவிடும். – ஜே.வி.செர்னே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இதுவென்றுணர்க!

முன்னைய யாழ்ப்பாணத்தின் இயங்கு நிலை எப்படி இருந்தது என்பதை நம் பெரியவர்கள் இன்றும் நினைவுபடுத்துவர்.

முன்பெல்லாம் யாழ்ப்பாணம் இரவு 10.30 மணிவரை இயங்கிக் கொண்டிருக்கும்.

புடவைக் கடைகள், மளிகைப் பொருள் சார்ந்த கடைகள் திறந்திருக்கும். மக்கள் நடமாட்டத்துக்குக் குறைவில்லை.

திரையரங்குகள் நிறைந்திருக்கும். யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் இருந்து கடைசி பஸ் இரவு 10.30 மணிக்கு புறப்படும்.

இதனைப் பட பஸ் என்று விழித்துக் கூறுவர்.

பட பஸ்ஸைப் பார்த்து விட்டு சோற்றுப் பானைக்குத் தண்ணீர் விடுகின்ற ஒரு மரபு எங்களிடம் இருந்தது.

யாரேனும் உறவினர்கள் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும் என்பதற்காக பானையில் சோறு காத்திருக்கும்.

பட பஸ் வந்த பின்பும் ஒருவரும் வரவில்லை என்பதை உறுதி செய்துவிட்டு, சோற்றுப் பானைக்குத் தண்ணீர் விடுவார்கள். இது மறுநாள் காலை பழஞ்சோறு.

பழஞ்சோறு, பழங்கஞ்சி உடலுக்கு மிகவும் நல்லது என்பதை மேற்குலகம் இப்போது கண்டறிந்துள்ளது.

என்ன செய்வது எங்கள் வீட்டில் வழமையாக இருந்த பழங்கஞ்சிப் பண்பாட்டை நாம் இழந்து பல காலம் ஆயிற்று.

ஆனாலும் பாட்டியிடம் வாங்கிக் குடித்த பழங்கஞ்சிக்கு நிகர் ஏதுமில்லை என்பதை இப்போதுதான் நாம் உணரத்தலைப்பட்டுள்ளோம்.

இவை ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணம் சென்றவர்கள் பட பஸ்ஸை தவறவிட்டால் அந்தோ கதிதான்.

தங்குவதற்கு இடமில்லை. நடந்து சென்று வீடு போய்ச் சேர்வதும் முடியாத காரியம்.

ஆகையால் பட பஸ்ஸை எவரும் தவறவிடமாட்டார்கள். அவ்வாறு தவறவிட்டால் அதற்கு மாற்று வழியுமில்லை.

அந்த பட பஸ் ஞாபகம் இப்போது நினைவுக்கு வருகிறது. ஆம், எங்கள் தமிழ் இனம் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான கடைசிச் சந்தர்ப்பத்துக்கு வந்துவிட்டோம். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால்,

அந்தோ கதி என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

ஆகையால் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் எங்களின் பிரச்சினையை முதன்மைப்படுத்தி எமக்கு நீதியைப் பெற்றுத் தாருங்கள் என்பதைக் கடுமையாக வலியுறுத்த வேண்டும்.

தவிர, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதற்கான முன்மொழிவை தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகத் தயாரித்துள்ளமை வரவேற்கப்பட வேண்டும்.

இந்த ஒற்றுமையை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பது அவசியம்.

ஏனெனில் எங்கள் உரிமைப் பயணத்துக்கான பட பஸ் இது.

ஆகையால் கவனமாக செயற்படுவோம்.

# எமது ஆட்சியை வீழ்த்த கூறிய பொய்யையே அரசாங்கம் தனது ஆட்சியில் செய்கின்றது

## முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

எமது ஆட்சியில் நாட்டின் அபிவிருத்தியில் சர்வதேச முதலீட்டாளர்களை அழைத்தபோது எம்மை தேசத்துரோகிகள் என விமர்சித்தவர்கள் இன்று தமது ஆட்சியிலும் அதே சர்வதேச முதலீட்டாளர்களையே நம்பியுள்ளனர் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையை அபிவிருத்தியின் பக்கம் திருப்ப வேண்டும் என்றால் அதில் சர்வதேச முதலீட்டாளர்களை இணைந்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமானது எனவும் அவர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தியில் சர்வதேச முதலீட்டாளர்களை இணைத்துக் கொள்ள எடுத்துக்கொண்ட தீர்மானத்தை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலத்தில் எமது ஆட்சியில் நாட்டின் அபிவிருத்தியில் சர்வதேச முதலீட்டாளர்களை இணைத்துக்கொள்வது நாட்டினை காட்டிக்கொடுக்கும் செயல் எனவும், நாட்டினை விற்கும் நடவடிக்கையை நாம் எடுப்பதாகவும், தேசத்துரோக செயல் எனவும் தொடர்ச்சியாக எம்மை விமர்சித்தவர்கள், அன்று மக்களை ஏமாற்ற கூறிய பொய்களில் இன்று அவர்களே சிக்கிக்கொண்டுள்ளனர்.

அன்று கூறிய பொய்களினால் இன்று அவர்களின் ஆட்சியில் நல்ல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நினைத்தாலும் அதனால் பாரிய நெருக்கடியை சந்திக்க நேர்ந்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்ட டயர் உற்பத்தி நிறுவனம் கூட எமது ஆட்சியில் விளையாட்டு டயர் நிறுவனம் என விமர்சிக்கப்பட்ட சர்வதேச முதலீட்டாளர்களின் தொழிற்சாலை என்பதையும் கூறிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-3)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கை அரசை நிறுத்தக் கோரி

## இணைய வழியில் கையெழுத்துப் போராட்டம்

(கொழும்பு)

ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் உறுப்பு நாடுகளை வலியுறுத்தும் வகையில் புலம்பெயர் தமிழ் இளையோர் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையவழி கோரிக்கை மனுவில் இதுவரை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களுக்கான நீதி (Justice for Eelam) என்ற தலைப்பில் https://www.justiceforeelam.org இணையத்தளம் ஊடாக இந்த கையெழுத்து இயக்கம் கடந்த ஒரு வாரத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழினப் படுகொலைகள் குறித்து சர்வதேசத்தின் மத்தியில் ஒருமித்த கருத்தொன்றை உருவாக்குவதும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்தி சுயாதீனமான விசாரணைக்கு வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது.

இனப்படுகொலை அல்லது பிற துஷ்பிரயோகங்களுக்கு காரணமானவர்களை கடுமையாக தண்டிப்பதன் மூலம் மீண்டும் ஒரு இனப்படுகொலை நிகழாமல் தடுக்கும் பொறிமுறையை நிறுவ விரைவாகச் செயற்படுமாறும் ஐ.நா. மனித உரிமைப் பேரவை மற்றும் உறுப்பு நாடுகளிடம் இந்த மனு ஊடாக கோரப்பட்டுள்ளது.

போர் நிறைவுக்கு வந்து 12 ஆண்டுகள் ஆகின்றபோதும் இலங்கைப் படையினர் இழைத்த குற்றங்களுக்கு பொறுப்புக்கூறவில்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறும் எந்தவொரு உள்ளக விசாரணையும் குற்றமிழைத்தவர்களை காப்பாற்றுவதாகவே அமையும். குற்றவாளிகளே தாங்கள் குற்றமற்றவர்கள் என தீர்ப்பளிக்கும் நிலையே உருவாகும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“நாங்கள் எங்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றிணைய வேண்டிய நேரம் இது. இந்த பிரசாரம் ஈழத்திற்கு நீதிக்காக தமிழ் இளையோர் ஆரம்பித்துள்ள பயணத்தின் ஆரம்பம் மட்டுமே” என பிரசார அமைப்பாளர்களில் ஒருவரான அபிராமி லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** பண்டாரிக்குளம் கிராமம், இராஜேந்திரகுளம் கிராமம், கோவில் குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, சின்ன சிப்பிக்குளம், வீரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## கடவுளுக்கு நெருக்கமானவர்

❖ வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும், அடுத்தபடியாய் இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.

❖ புகழ்ச்சியையும், அவமதிப்பையும் கருதாது என்றும் உண்மையை மேற்கொண்டு செய்யும் தியாகமே, சிறந்த தியாகம்.

❖ தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே வாழத் தகுதியுள்ளவன்.

❖ நம்மை நாமே வெறுக்காமல் இருப்பது முதற்கடமை. முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்.

❖ உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். தூய்மை உடையவன் தான் கடவுளை மிக நெருக்கமானவன் ஆகிறான்.

❖ உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள். பணம் சக்தியல்ல, நன்மையும் தெய்வ பக்தியுமே சக்தி.

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2021 - 12.02.2021

# செல்வநிலை உயரும்



மேஷ இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். 9 இற்கு அதிபதியான குரு பகவான், உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்தைப் பார்க்கின்றார்.

எனவே சென்ற மாதத்தை விட இந்த மாதம், சிறப்பாகவும் செல்வநிலை உயரும் விதத்திலும் அமையும்.

### அஷ்டமத்தில் கேது

இம்மாதம் தன ஸ்தானத்தில் ராகு இருப்பதால் பற்றாக்குறை தீரும். பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறப் போகின்றது. ஆனால் கேது எட்டில் இருப்பதால் பணம் வந்த மறுநிமிடமே செலவாகி விடும்.

எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாமல் போகலாம். ஆன்மிகப் பற்று அதிகரிக்கும். ஆலயத் திருப்பணிகள் அல்லது வழிபாட்டு முறைகளுக்காக, வரவில் ஒரு பகுதியை செலவழிப்பீர்கள்.

### பலம் பெறும் தொழில் ஸ்தானம்

பொதுவாக இந்த மாதம், தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடம் பலம் பெற்றிருக்கின்றது. சுக ஸ்தானாதிபதி சந்திரனும், பஞ்சம ஸ்தானாதிபதி சூரியனும் 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனும் 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருவும் 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியும் ஒரே இடத்தில் பலம்பெற்று கூட்டுக்கிரக யோகத்தை வழங்குகின்றார்கள். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். அரசு அல்லது வங்கிகளின் வழியில் உதவி வந்து சேரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இடத்திற்கு, ஊதிய உயர்வோடு மாறுதல் வரலாம்.

### மகர - புதன் வக்கிரம்

ஜனவரி 21 ஆம் திகதி முதல் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை, மகர இராசியில் புதன் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை சகோதர மற்றும் சகாய ஸ்தானத்திற்கும் ருண, ரோக, சத்ரு ஸ்தானத்திற்கும் அதிபதியாக இருப்பவர், புதன். எனவே வழக்குகளில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். வீண் விவகாரங்கள் தலையெடுக்கலாம். நீங்கள் செய்யும் முயற்சிகளை யாரிடமாவது, முன்னதாகவே தெரிவித்தால் அது நடைபெறாமல் போகக்கூடும். பெப்ரவரி 10 ஆம் திகதி புதன் வக்கிர நிவர்த்தியாகின்றார். அதன்பிறகு உத்தியோக முயற்சி கைகூடும்.




### மகர - குரு சஞ்சாரம்

தற்சமயம் மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்றிருந்தாலும் சனியோடு இணைந்திருப்பதால் 'நீச்ச பங்க இராஜயோக'த்தை உருவாக்குகின்றார். அப்படிப்பட்ட குரு பகவான் ஜனவரி 22 ஆம் திகதி முதல் அஸ்தமனம் அடைகின்றார்.

எனவே, தந்தை வழியில் விரோதங்கள் வரலாம். பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படும். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றங்கள் ஏற்படலாம்.

### மகர - சுக்கிரன் சஞ்சாரம்

ஜனவரி 29 ஆம் திகதி, மகரத்திற்கு சுக்கிரன் செல்கின்றார். தன சப்தமாதிபதி தொழில் ஸ்தானத்திற்கு செல்லும் இந்த நேரம், யோகமான நேரமாகும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டு. வாழ்க்கைத் துணையின் வேலைக்காக செய்த முயற்சி கைகூடும். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பணப்பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

பிள்ளைகளின் எதிர்கால நலத்திற்காக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளும் பெற்றோர்களும் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பர். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

# உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்



ரிஷப இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் இருக்கின்றார்கள். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் அஷ்டமத்தில் மறைந்திருக்கின்றார்.

சுக்கிரன் 6 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குபவர் என்பதால், 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப நல்ல திருப்பங்கள் வரப்போகின்றது. அஷ்டமத்துச் சனி விலகி விட்டதால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

### ஜென்ம ராகுவின் சஞ்சாரம்

இம்மாதம் ஜென்மத்தில் ராகுவும் ஏழில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். ராகு சஞ்சரிக்கும் இடத்திற்கு அதிபதியான சுக்கிரன், குருவின் வீட்டில் இருக்கின்றார்.

குரு பகவான் நீச்சம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கின்றார். எனவே அக்கறை செலுத்தாத காரியத்தில் கூட ஆதாயம் கிடைக்கும். ஏழில் கேது இருப்பதால் வாழ்க்கைத் துணையோடு பிரச்சினை ஏற்பட்டாலும் அதைச் சமாளித்து விடுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

### கூட்டுக்கிரக யோகம்

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பிதுர்ராஜ்ஜித ஸ்தானத்தில், மாதத் தொடக்க நாளில் சந்திரன், சூரியன், குரு, புதன், சனி ஆகிய 5 கிரகங்களும் சஞ்சரிக்கின்றார்கள்.

இந்தக் கூட்டுக்கிரக யோகத்தின் விளைவாக பல நன்மைகள் உங்களுக்கு வரப்போகின்றது. குறிப்பாக உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். கவலைகள் அகலும். காரியங்களை செயற்படுத்தி வெற்றி காண்பீர்கள். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய பாதை புலப்படும். வளர்ச்சிக்குரிய காரியங்கள் நடைபெறும்.

### மகர - புதன் வக்கிரம்

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மகர இராசியில் ஜனவரி 21 ஆம் திகதி வக்கிரம் பெறுகின்றார். பெப்ரவரி 10 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். இந்த காலத்தில், குடும்பத்தில் சில பிரச்சினைகள் தலைதூக்கும். குடியிருக்கும் வீட்டாலும் பிரச்சினை, பிள்ளைகளாலும் பிரச்சினை என்ற நிலை உருவாகும். தன்னம்பிக்கையோடு அதைச் சமாளிப்பீர்கள். கொடுக்கல் - வாங்கல்களில் கவனம் தேவை.




### மகர - குரு சஞ்சாரம்

தற்சமயம் மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்றிருப்பது யோகம் தான். அவர் சனியோடு சேர்ந்து 'நீச்ச பங்க இராஜயோக'த்தில் இருந்தாலும் சூரியனும் அவரோடு இணைந்திருப்பதால், எதிர்பார்த்ததைக் காட்டிலும் நற்பலன்கள் கூடுதலாகவே கிடைக்கும். குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் மதிப்பு, மரியாதை உயரும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடிவரும்.

### மகர - சுக்கிரன் சஞ்சாரம்

ஜனவரி 29 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இராசிநாதன் 9 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் தேடி வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, உயர் அதிகாரிகளின் ஆதரவால் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். இம்மாதம் பிரதோஷ நாளில் நந்தியம்பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உடன்பிறப்புகள், உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் மற்றும் திருமண முயற்சிகள் கை கூடும் நேரம் இது. பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோகத்தில் திறமை பளிச்சிடும். அபிராமி அம்மன் வழிபாடு அனுகூலம் தரும்.

(தொடரும்)

## பருத்தித்துறை...

ளார்.

மேல் மாகாணத்தில் இருந்து திரும்பிய இருவருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து திரும்பிய அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குறித்த நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## குற்றவாளி...

காப்பு அமைச்சர் சரத் வீரசேகர நீதி அமைச்சர் அலி சப்ரியை நேற்று திங்கட்கிழமை நீதி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடும்போதே இது தொடர்பாக ஆராயப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, போதைப்பொருள் வியாபாரிகள், அதனை விநியோகிப்பவர்கள் மற்றும் அவர்களுக்கு எதிராக விரைவில் தண்டனை பெற்றுக் கொடுக்க தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் வெளிநாடுகளில் இருக்கும் போதைப்பொருள் வியாபாரிகளை நாட்டுக்கு அழைத்து வரவும் அந்த வியாபார வலைத்தளத்தை இல்லாமலாக்கவும் தேவையான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-3)

## கல்வி அமைச்சர்...

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி அறநெறி பாடசாலைகள், கல்விச் சேவைகள், பாடசாலைகள் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவுக்கு நேற்று கோவிட் - 19 தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இவருடன் தொடர்புபட்ட அடிப்படையில் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## சுகாதார அமைச்...

இந்த உத்தியோகத்தர்களுக்கு எவ்வாறு கோவிட் தொற்று ஏற்பட்டது என்பது பற்றிய விபரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, இந்த கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணிய 74 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.(ம-3)

## கொரோனாத்...

வித்தார்.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## பொதுமக்களின்...

பட்டதால், அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மண்டைதீவு ஜே107 கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட 29 பேரின் 18 ஏக்கர் பரப்பு காணி கடற்படையினருக்காக சுவீகரிக்க நிலஅளவைத் திணைக்களத்தினரால் காணி அளவீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணி உரிமையாளர்களும் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் அங்கு திரண்டிருந்தனர்.

இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்வதற்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது காணிகளை அளவீடு செய்ய கடும் எதிர்ப்பு வெளிப்படுத்திய நிலையில் காணிகளை அளவீடு செய்யாமலே நிலஅளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றிருந்தனர்.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆகிய 4 தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றாக இணைந்து எதிர்ப்பு போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

## இலங்கைக்கு...

கூட்டணி சிவில் சமூகத்தவர்களின் ஆதரவுடன் இலங்கை தொடர்பான சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர் இதனை உரிய முறையில் எதிர்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக புதிய தீர்மானம் கொண்டு வரப்படுவது நிச்சயம் என்பதால் இலங்கை மேலும் தாமதிக்காமல் நிலைமை குறித்து ஆராய்வது முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் கட்சிகளின் கருத்துக்களை சாதாரணமாக கருதக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வன்னி போர்முனையில் யுத்தத்தை நடத்துவதற்கு பிரிட்டனும் பிரான்ஸும் இணைந்து மேற்கொண்ட முயற்சிகள் அவர்கள் இந்த விடயத்தில் கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தின என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். (ம-3)

## வடக்கில்...

பரிசோதனையில் வவுனியாவைச் சேர்ந்த ஐவர் உள்ளிட்ட பத்துப் பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஐவருக்கும் மன்னாரில் 2 பேருக்கும் மற்றும் யாழ்ப்பாணத்தில் மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## இடமாற்றத்தில்...

வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

சகல ஆசிரியர்களுக்கும் இடமாற்றத்தில் 'சம உரிமையை வழங்கி தேசிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்த வலியுறுத்தியும் ஆறு வருடங்களுக்கு மேல் வெளிமாவட்டங்களில் சேவை ஆற்றிய போதும் அவர்களின் இவ்வருடத்துக்கான இடமாற்றம் நிராகரிக்கப்பட்டுள்ளமையை கண்டித்தும் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஆசிரியர்கள் அங்கிருந்து பேரணியாகச் சென்றுவடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். (ம-3,18)

## ஆதி ஐயனார்...

நிலங்கள் காணிகள் உள்ளடங்கிய குமுளமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை மற்றும் மணலாறு படலைக்கல்லு பகுதி ஆகிய இடங்களில் இரண்டு புராதன பௌத்த விகாரைகள் இருந்தமைக்கான தொல்லியல் சிதைவுகள் காணப்படுவதாக தெரிவித்து இராணுவத்தின் அனுசரணையுடன் தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகள் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மலைப் பகுதியில் புராதன ஆதிசிவன் ஐயனார் ஆலயம் காணப்பட்ட நிலையில் அங்கு குமுளமுனை, தண்ணிமுறிப்பு கிராம மக்கள் சென்று பொங்கல் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டு வந்திருந்தனர். ஆனால் நேற்று முன்தினம் குருந்தூர்மலைப் பகுதிக்குள் சென்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறான ஆலயம் அங்கு இல்லாது உடைத்து அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (ம-3,281)


அத கோடிபதி
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1167
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 18.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 99,674,440
வெற்றி இலக்கங்கள் 10 15 37 38
ஆங்கில எழுத்து J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3497
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 18.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 41,010,441
வெற்றி இலக்கங்கள் 03 46 55 57
ஆங்கில எழுத்து K
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,493,687/=
திகதி: 18.01.2021
வெற்றி வாரம்: 3048
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 01 42 45 59
கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,060,100

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1341
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 18/01/2021
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Q 39 52 57 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,911,836/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1725
சீட்டிழுப்பு திகதி 18.01.2021
வெற்றி இலக்கங்கள் 04 15 17 69
ஆங்கில எழுத்து Z
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,571,128
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

தன நிதானய
திகதி - 2021.01.18
சீட்டிழுப்பு இலக்கம் - 408
I 01 40 52 78
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 18.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2666
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 22 31 45 59

மஹஜன சம்பத
திகதி 2021/01/18
சீட்டிழுப்பு இலக்கம் 4371
S 3 5 0 3 2 4

மெகா பவர்
திகதி 18/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0738
U 13 06 33 35 69

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1655
திகதி 2021.01.18
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 46 55 67 73



# சாவகச்சேரியில் மீண்டும் அதிர்ஷ்டம்

சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பு விற்பனை செய்யப்பட்ட தன நிதானய சீட்டிழுப்பின் மூலம் 14.01.2021 அன்று 10 இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கோடீஸ்வரரையும் பல லட்சாதிபதிகளையும் சாவகச்சேரியில் உருவாக்கியுள்ளோம்.

நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்.

20 ரூபாயை கொடுத்து இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

சாவகச்சேரி க.பிரதாஸ்

T.P- 077 357 8224 N/L/B-220054

(C-1197)

## விற்பனைக்கு

பசன் பிளஸ் HY XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.

தொடர்பு (5318)

077 203 0309

## உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல ஆயுர் வேத மருத்துவமனையில் சிகிச்சைகளை மேற்கொள்ள ஆண் உதவியாளர் தேவை.

தொடர்பு (C-1194)

077 912 8944

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராச வீதியில் ராச வீதி சந்திக்கு அருகாமையில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

தொடர்பு (5320)

077 468 3354
077 805 1655

## தவறிவிட்டது

வ. சந்திரகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை உள்ளடங்கலான பேர்ஸ் திருநெல்வேலி சந்திக்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 869 2962

## 60 ஆவது அகவையில் பிறந்த நாளும் சேவைநயப்பும்



யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இரண்டு வருடங்கள் கணிதபாட ஆசிரியையாகவும் தமது வாழ்வில் 36 வருடங்கள் கணித ஆசிரியையாக அளப்பரிய கல்விச் சேவையாற்றி இன்று (19.01.2021) அகவை அறுபதில் ஓய்வு பெறும்

### திருமதி வசந்தா சபாநாதன்

சேவை விபரம்

பது/ சரஸ்வதி ம. வி
16 .04. 1985 - 22. 07. 1986
பது /தமிழ் மகளிர் ம .வி
23. 07 .1986 - 08 .02. 1988
யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை
09 .02. 1988 - 31. 12. 1989
மு/ பாண்டியன் குளம் ம. வி
01. 01. 1990 - 17. 10. 1993
யா/ விக்ரோறியாக் கல்லூரி
18. 10. 1993 - 29. 05. 1994
யா/ அராலி கிழக்கு அ. மி. த. க
30. 05. 1994 - 16. 02. 2014
யா/ அராலி சரஸ்வதி ம. வி
17. 02. 2014 - 19. 03. 2014
யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை
20. 03. 2014 - 04. 09. 2018
யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம. வி
05. 09. 2018 - 18. 01. 2021

வாழ்த்துவோர்:
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி
ஆசிரியர் நலன்புரிக் கழகம்

(5299)

## மஹோற்சவம் ஆரம்பம்

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம் பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும்-27ஆம்திகதிபுதன்கிழமை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தைப்பூச நன்னாளன்று காலை தீர்த்தத்திருவிழாவும்இடம் பெறும்.

(ம-03,18)

## RAVEENS EMC
### KARAVEDDY

பெண் ஊழியர் உடனடியாகத் தேவை.
Computer Typing (English & Tamil)
A/L விஞ்ஞான பிரிவில் படித்திருத்தல்.

நிர்வாகி - P. EASWARANATHAN (C-1193)

021 226 3321, 076 416 9845

## பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கிலம்

(C-1195)

தரம் 6 முதல் 11 வரை பாடசாலை பாடத்திட்டத்தை உள்ளடக்கியது
சிறார்களுக்கு 4 வயது முதல் 11 வரை
Grammar, Reading, Writing, Listening, Speaking
பதிவுகளை ஜனவரி 23ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
DMI School + Cambridge Course Curriculum நேரடி வகுப்புகளாகவும்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் Online மூலம் ZOOM வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளக்கூடிய வசதி

DMI COMPUTER EDUCATION

No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 0212224403 0777173517

## விரைவு பொதிகள் சேவை
### V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1167)


0768226240 DHL

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர்

## சோமசுந்தரம் புவனசுந்தரம்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகஸ்தர்)



கடந்த 20.12.2020 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (19.01.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு நல்கிய அன்புள்ளங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் உள்ளூரிலும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலமாகவும் பதாதைகள், சமூக வலைத்தளங்களிலும், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் மலர் வளையங்கள் சாத்தியும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : தற்போது நிலவும் கொரோனா தொற்று காரணமாக அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

தோற்றம் 1949.10.17

மறைவு 2020.12.20

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (5314)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.